Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் இளிச்சுடர்
பல் மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.



- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

(1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

(சி-1761)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 சித்திரை 13 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.அவ்வல் 04 (25.04.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ் :206

## வடமேல் மாகாணசபைத் தேர்தல்

# ஆரம்ப கட்ட முடிவுகளில் ஆளும் கட்சிக்கே வாய்ப்பு!

(கொழும்பு)

**வடமேல் மாகாண சபைக்கு நேற்று நடைபெற்ற தேர்தலில் - இன்று அதிகாலை வெளிவந்த முடிவுகளின் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அதிகளவான வாக்குகளைப்பெற்று முன்னணியில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

நேற்றுமாலை 4.00 மணியளவில் வாக்களிப்பு முடிவடைந்ததும் - குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்ட செயலகங்களுக்கு வாக்குப்பெட்டிகள் எடுத்துச்செல்லப்பட்டன.

அங்கு பிற்பகல் 4.30 மணியளவில் தபால் மூலவாக்குகள் எண்ணும் பணி ஆரம்பிக்கப்பட்டது. இரவு 8.00 மணியளவில் ஏனைய வாக்குகள் எண்ணும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

புத்தளம்மாவட்ட தபால் வாக்குகளை எண்ணும் பணி சுமார் 10.00 மணியளவில் முடிவடைந்தது. இதில ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சுமார் 60 வீதமான வாக்குகளையும் ஐ.தே.க 39 வீதமான வாக்குகளையும் பெற்றன.

குருநாகல் மாவட்டத் தபால் மூல வாக்களிப்பு முடிவு இன்று அதிகாலை 1.00 மணியளவில் வெளியானது. இதில் ஐ.ம.சு முன்னணியே கூடுதல் வாக்குகளைப் பெற்றது. இந்தக்கட்சிக்கு 66 வீதமான வாக்குகளும், ஐ.தே.க கட்சிக்கு 33 வீதமான வாக்குகளும் கிடைத்தன.

இன்று அதிகாலை 3 மணி வரை வென்னப்புவ, ஆனைமடுவ, பண்டுவஸ்நுவர, மாவத்தகம, நாத்தாண்டியா ஆகிய தேர்தல் பிரிவுகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இவையனைத்திலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே முன்னிலை வகித்தது.

இதேவேளை வடமேல் மாகாண சபைக்கு நேற்று நடைபெற்ற தேர்தலில் சுமார் 50 வீதமானோர் வாக்களித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

வடமேல் மாகாணசபைக்கு 52 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு 12 கட்சிகளையும், ஏழு சுயேட்சைக்குழுக்களையும் சேர்ந்த 804 வேட்பாளர்கள் தேர்தலில் போட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# விகாரைக்குள் நுழைந்து காடையர் குழு அட்டகாசம்

## சபாநாயகர் தெரிவின் எதிரொலி

ஜாதிக ஹெல உறுமயவின் நடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஓமல்பே சோபித தேரோவின் எம்பிலிப்பிட்டிய ஹிங்குரஹார போதிராஜாராம விகாரைக்குள் நேற்று அதிகாலை ஊடுருவிய சிலர் அங்கு கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டனர்.

முகமூடிகளுடன் சென்ற இந்தக் குழுவினர் கூரிய ஆயுதங்களை வைத்திருந்தனர். இவர்கள் நேற்று அதிகாலை 1 மணியளவில் போதி ராஜராம விகாரையைச் சுற்றியுள்ள இரத்தினபுரி - எம்பிலிப்பிட்டிய வீதியின் இருமருங்கிலும் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டனர்.

விகாரைக்கு அருகில் சந்தேகத்துக்குரிய இளைஞர்கள் நடமாடுவதாக விகாரையின் காவலாளி அறிவித்ததை அடுத்து, அங்கிருந்த இரு பிக்குகள் சம்பவ இடத்திற்குச் சென்றனர். அவர்கள் இருவரையும் மேற்படி ஆயுதக்குழுவினர் மிரட்டியதை அடுத்து விகாரையில் இருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் அங்கு சென்றார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வடமேல் மாகாண தேர்தல் முடிவுகள்

| புத்தளம் மாவட்டத் தபால் வாக்குகள் | | |
|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - | 2602 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - | 1675 |
| செல்லுபடியான வாக்குகள் | - | 4291 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | - | 64 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - | 4355 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | - | 4982 |
| **குருநாகல் மாவட்டம் தபால் வாக்குகள்** | | |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - | 13945 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - | 6962 |
| ஐக்கிய லலித் முன்னணி | - | 08 |
| ஐக்கிய சிங்கள மகா சபை | - | 11 |
| தேசிய அபிவிருத்தி முன்னணி | - | 16 |
| புதிய இடது சாரி முன்னணி | - | 21 |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - | 137 |

## நோர்வேயின் தொடர்பு கிடைத்ததும்

# சமாதான முயற்சிகள் குறித்து தலைமைப்பீடம் அறிவிக்கும்!

### புலிகளின் ஊடகப்பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான அனுசரணையாளராகப் பணியாற்றுமாறு நோர்வே பிரதமர் பொண்டவிக்குக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த அழைப்பு தொடர்பாக -

நோர்வே தரப்பு தம்முடன் உத்தியோகபூர்வமாக தொடர்பு கொண்ட பின்னர் இதுதொடர்பாக தமது நிலைப்பாட்டை

இணையத்தளம் ஒன்றுக்கு ஜனாதிபதி சந்திரிகா நோர்வேக்கு விடுத்த அழைப்பு குறித்து கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை, நோர்வே ஊடாக ஜனாதிபதி சந்திரிகா விடுத்துள்ள சமாதான அழைப்பை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும் அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்தது.

தம்மால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு இந்தப்

| | | |
|---|---|---|
| புதிய இடதுசாரி முன்னணி | - | 21 |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - | 137 |
| சிங்கள பூமிபுத்திர கட்சி | - | 22 |
| சுயேட்சைக்குழு (1) | - | 09 |
| செல்லுபடியான வாக்குகள் | - | 21138 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | - | 406 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - | 21544 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | - | 24276 |

**புத்தளம் மாவட்டம்**
**வென்னப்புவ தேர்தல் பிரிவு**

| | | |
|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - | 23483 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - | 16685 |
| ஐக்கிய முஸ்லிம் மக்கள் முன்னணி | - | 13 |
| தேசிய அபிவிருத்தி முன்னணி | - | 88 |
| புதிய இடதுசாரி முன்னணி | - | 33 |
| சிங்கள பூமிபுத்திரக் கட்சி | - | 11 |
| செல்லுபடியான வாக்குகள் | - | 40356 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | - | 1563 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - | 41919 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | - | 92966 |

**புத்தளம் மாவட்டம்**
**ஆனைமடுவ தேர்தல் பிரிவு**

| | | |
|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - | 29340 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - | 19252 |
| ஐக்கிய முஸ்லிம் மக்கள் முன்னணி | - | 29 |
| தேசிய அபிவிருத்தி முன்னணி | - | 59 |
| செல்லுபடியான வாக்குகள் | - | 48851 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | - | 2533 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - | 51384 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | - | 92596 |

நோர்வே தரப்பு தம்முடன் உத்தியோகபூர்வமாக தொடர்பு கொண்ட பின்னர் இதுதொடர்பாக தமது நிலைப்பாட்டை விடுதலைப்புலிகளின் தலைமை வெளியிடும் என விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்ரர் தெரிவித்தார்.

# விகாரையில் கறுப்புக்கொடி; ஜே.வி.பியினரே காரணமாம்!

## ஓமல்பே சோபித தேரோ குற்றச்சாட்டு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன் தொடர்புடையவர்களே விகாரையில் கறுப்புக்கொடி கட்டிய சம்பவத்துக்கு காரணமென தகவல்கள் கிடைத்துள்ளதாக வண.ஓமலியே சோபித தேரோ தெரிவித்தார்.

குறிப்பாக ஜே.பி.யினரே இந்தச் சம்பவத்துக்குப் பின்னால் உள்ளனர். இந்தச் சம்பவத் தினால் எனது உயிருக்கு அச் சுறுத்தல் விடுக்கப்படாதபோதிலும், இது குறித்து எனது கவனம் திரும்பியுள்ளது.

பௌத்த விகாரையென்பது சமூகத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததொரு இடமாகும். இதனால் விகாரையிலுள்ள பௌத்த பிக்குகளுக்கோ, விகாரையின் சொத்துகளுக்கோ சேதம் ஏற்படுமானால் - அது ஒட்டுமொத்த பௌத்த தர்மத் துக்கும் ஏற்படுத்துகின்ற சேதமாகவே கருதப்படும்.

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவத்துக்குப் பின்னர் - அன்றைய தினமே எம்பிலிப்பிட்டிய வுக்கு வரவேண்டாம் என்று - அச்சுறுத்தும் பாணியில் பல்வேறு தொலைபேசி அழைப்புக்கள் வந்தன.

ஜனநாயக முறையில் நாம் எமது வாக்குகளை அளித் தோம். நாம் மேற்கொண்ட ஜனநாயக நடவடிக்கைகளுக்கு எதிராகச் சிலர் செயற்பட (12 ஆம் பக்கம் பார்க்க)

காரசபை யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பேச்சுக்களை ஆரம்பிக்கமுடியும் எனப்புலிகள் நிபந்தனை முன்வைக்கலாம் என்றும், பின்னர் தகவல் தெரிவித்திருப்பதாக அந்த இணையத்தளம் தெரிவித்துள்ளது.

# ஹெல உறுமயவுக்கு எதிராக வாயைத் திறக்க வேண்டாம்!

## ஜே.வி.பிக்கு சுதந்திரக்கட்சி எச்சரிக்கை

ஹெல உறுமய கட்சியைச் சேர்ந்த பௌத்த பிக்குக ளுக்கு எதிராக எவ்விதமான பிரசார நடவடிக்கையையும் மேற்கொள்ள வேண்டாமென சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஜே.வி. பியிருக்கு எச்சரிக்கை விடுத் துள்ளனர்.

ஜே.வி.பியின் புத்த பிக்குகளுக்கு எதிரான பிரசாரம் தொடர்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அநுரா பண்டார நாயக்க, சுசில் பிரேமஜெயந்த, எ.எச்.எம்.பௌசி மற்றும் முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க ஆகியோர் தமது கடுமையான விமர்சனங்களைத் தெரிவித்துள்ளனர்.

ஜே.வி.பியின் பிக்குகள் எதிர்ப்புத் தொடர்பாக சுந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் தெரிவிக்கையில்,

இவர்களின் இந்த நடவடிக்கை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கத்தை மோசமாகப் பாதிப்படையச் செய்யும். இதனால் அரசாங்கத்தின் ஸ்திரத் தன்மையும் பாதிப்படையும்.

அத்துடன் நாடாளுமன்றத்தில் புத்த பிக்குகளின் ஆதர வில்லாமல் நாம் அரசாங்கத்தை தொடர்ந்து நடத்துவதென்பது மிகவும் சிக்கலுக்குரியதாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர (12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# குண்டு வீச்சில் இறந்தவர்களுக்கு சாவகச்சேரியில் நினைவாலயம்!

## சாவகச்சேரி வணிகர் கழகம் நடவடிக்கை

(ஆழியவளை)

சாவகச்சேரிப் பகுதிகளில் படையினரின் குண்டு வீச்சுக்களின்போது, கொல்லப்பட்ட பொதுமக்களின் நினைவாக, நினைவாலயம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் இந்த நினைவாலயத்தை அமைப்பதற்கு சாவகச்சேரி வணிகர் கழகம் ஈடுபட்டு வருகின்றது.

குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை காரணமாக யாழ்ப்பாணத்தையும், வலிகாமத்தையும் படையினர் கைப்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தபோது, அப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் சாவகச்சேரிப் பகுதியிலும், அதனை அண்மித்த பகுதிகளிலும் தஞ்சம் புகுந்திருந்த வேளை - அவர்களின் இருப்பிடங்களை இலக்குவைத்து படையினர் நடத்திய வான் தாக்குதலின்போது பல பொதுமக்கள் கொல்லப்பட்டமை தெரிந்ததே. (122)

# அரச அதிபர் பத்மநாதன் தலைமையில் அதிகாரிகள் குழு நெடுந்தீவுக்கு விஜயம்!

## பிரதேச அபிவிருத்தி குறித்து ஆராய்வு

நெடுந்தீவுப் பகுதியில் அமைந்துள்ள மேட்டுக்குளம் 'நியாப்' திட்டத்தினால் புனரமைக்கப்படவுள்ளதால், அது தொடர்பான முன்னாயத்தக்கூட்டம் நேற்று சீக்கியாம்பிள்ளை கலவன் பாடசாலையில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ச.பேரானந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் - யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன், நியாப் திட்டப்பிரதிப்பணிப்பாளர் கா. பாலகிருஸ்ணன், கமநலத்திணைகள ஆணையாளர் க.சுந்தரேசன், உதவி அரசாங்க அதிபர் தி.வீரபத்திரப்பிள்ளை, நீர்ப்பாசனப் பொறியியலாளர் கணேசராசா, நிலஅளவைகள் திணைக்கள அத்தியட்சகர் சிவதாஸ், காணி உத்தியோகத்தர் ஞானசேகரன், சமுர்த்தி உதவி ஆணையாளர் மகேஸ்வரகுமார், வீதி அபிவிருத்தி அதிகாரசபை பிரதம பொறியியலாளர் ஸ்ரீநிவாசன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் திருச்சிற்றம்பலம், விவசாய போதனாசிரியர் பத்மதாசன், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் மற்றும் நெடுந்தீவு அரசியற்றுறை பொறுப்பாளர் எழில் நெடுந்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர்.

இத்திட்டம் தொடர்பாக நியாப் திட்டப் பிரதிப்பணிப்பாளர், நீர்ப்பாசனப் பொறியியலாளர், யாழ்.அரச அதிபர் மற்றும் உள்ளூர் பிரதிநிதிகளும் உரையாற்றினர்.

காலை 9.30 மணிக்கு பயணிகள் படகுமூலம் நெடுந்தீவு வந்த அரச அதிபர் தலைமையிலான குழுவினர், நெடுந்தீவு துறைமுகப்பகுதி ஆழமாக்கல், மாவலித்துறைமுகத்தில் அமைந்துள்ள வாடிவீடு புனரமைத்தல் தொடர்பாக நேரடியாக பார்வையிட்டு கருத்துரைகள் வழங்கியதுடன், நெடுந்தீவு பல.நோ.கூ. சங்க மண்டபத்தில் நெடுந்தீவு நிலைமைகள் தொடர்பான அறிமுகக் கூட்டமொன்றும் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ் செல்வநாயகம் உரையாற்றினார்.

இந்தக் கூட்டத்தில் பொதுமக்கள் மத்தியில், குளம் ஆழமாக்கல் தொடர்பாக நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் கட்டம் கட்டமாக விளக்கமளித்தார்.அதனைத் தொடர்ந்து வேலைத்திட்டத்தினை முன்னெடுத்துச் செல்லும் வகையில் செயற்குழு, கண்காணிக்கும் குழு என்பன உருவாக்கப்பட்டன. (113)

# வடமராட்சி கிழக்கு பாடசாலைகளின் புனரமைப்பு பணிகள் மந்தகதியில்!

## பாடசாலை சமூகம் கவலை

(ஆழியவளை)

வடமராட்சி கிழக்கில் மீள்குடியேற்றம் நடைபெற்ற பிரதேசங்களில் மீள ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளைப் புனரமைப்பதற்கு பல மில்லியன் ரூபாவினை 'நிகொட்' நிறுவனம் ஒதுக்கியுள்ளபோதும், புனரமைப்புப் பணிகள் மிகவும் மந்தகதியில் நடைபெற்று வருவதாக அந்தப்பகுதி பாடசாலைச் சமூகத்தினர் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தப்பிரதேசத்தில் மீள ஆரம்பிக்கப்பட்ட உடுத்துறை மகாவித்தியாலயம், ஆழியவளை சி.சி.த.க வித்தியாலயம், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா விததியாலயம், தாளையடி றோக.த.க பாடசாலை என்பவற்றைப் புனரமைப்புச் செய்வதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோதும், ஆழியவளை சி.சி. த.க வித்தியாலயத்தில் இன்னமும் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப் படவில்லை. ஏனைய மூன்று பாடசாலைகளிலும் புனரமைப்பு வேலைகள் ஆமை வேகத்திலேயே நடைபெற்று வருகின்றது.

இந்த நிலைமை காரணமாக மாணவர்கள் வகுப்பறை வசதிகள் இன்றி மரநிழல்களிலேயே தொடர்ந்து கல்வி கற்கின்ற அவல நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

எனவே, காலம் தாழ்த்தாது, இந்த அவல நிலையைப் போக்குவதறகாக 'நிகொட்' நிறுவன அதிகாரிகளும் திணைக்களத் தலைவர்களும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அந்தப்பகுதி பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (122)


கொம்பியூட்டர் பொலிமர் இறப்பர் ஸ்ராம்
இலவசம்
ஆச்சரியமா?
ஏப்ரல் 5 முதல் மே 5 வரை.
விபரங்கள் அறிய
யசோ
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்..
(சி/2395)

ராஜா யாழ்ப்பாணம்.
இளைய தளபதி
விஜய், திரிஷா நடித்த
கில்லி

காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-2387)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விக்ரம், சூர்யா, லைலா
நடித்த
பிதாமகன்
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.9.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு. இரவு : 8.45 (பு.நே.)
Do not Disturp
(சி-2386)


## சிறுவிளம்பரம்

### காணி விற்பனைக்குண்டு

நல்லூர் - நாயன்மார்க்கட்டில் தோட்டக்காணி 4 பரப்பு விற்பனைக் குண்டு. தொடர்புகளுக்கு:- 84/1, மூத்த விநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். **T.P** - 0777-110578 (719)

### தவறிவிட்டது

281/6, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் வதியும் திருமதி கிஷோக்குமாரின் தாலிக்கொடி கண்டி வீதியில் இருந்து பெரியகடை ஊடாக பருத்தித்துறை வீதி (மந்திகை) வரையான பகுதிக்கிடையில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் - மேற்படி விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். கொடியில் தாலியுடன் இரு காசுகள் உள்ளன. (9 பவுண்).

### மறைந்த ஆயருக்கு இரங்கற் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

மறைந்த அதிவணக்கத்திற்குரிய ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையின் முதலாவது வருட இரங்கல் திருப்பலி நாளை மாலை 5 மணிக்கு புனித மரியன்னை பேரால யத்தில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

இந்தத் திருப்பலியில் அனைவரையும் கலந்து கொண்டு மறைந்த ஆயரின் ஆன்மா சாந்திக்காக செபிக்கும் வண்ணம் அனைவரிடமும் கேட்டுகொள்வதாக, அஞ்சலிக்குழு சார்பில் ஈ.செல்வராஜா தெரிவித்தார்,


பதிப்புலக வேந்தர்களே!

இனி நீங்கள் உங்கள் தேவைகளுக்காய் அந்நிய மண்ணில் அலையவேண்டியதில்லை. மொழிச்சிக்கல், பாதுகாப்புப்பிரச்சனை, பிரயாணச்செலவு அதிகரிப்பு, அலைச்சல், போன்றவற்றால் சிரமப்படத் தேவையில்லை.

உங்கள் தேவைகளை எங்கள் மண்ணிலே அறிமுகப்படுத்துவதில் பெருமையடைகின்றோம்.

முதன் முதலில் தமிழீழப்பகுதியில் மாத்திரமன்றி இலங்கையிலேயே (ROLER IMAGE SETTER) - COLOUR SEPARATION (கலர் பிரித்தல்) சேவையை அறிமுகப்படுத்துகின்றோம்.

நிலா பதிப்பகம் பிரதான சாலை, கிளிநொச்சி

அத்துடன் எமது மேலதிக சேவைகளாக



- COLOUR SEPARATION SERVICE
  அனைத்து அளவுகளிலும் செய்து கொடுக்கப்படும்.
- 4X8 அளவுகளில் PCC கலர் பிறிண்ட் சேவை
  (4x8 SIZE PCC COLOUR DIGTAL PRINT)
- 4X8 அளவுகளில் COOL & HOT மென்காப்பிடுகை சேவை
  4x8 SIZE COOL & HOT LAMINATING SERVICE
- அழுத்திப் பதிதல் சேவை
  HOT IMPOSING (GOLD & SILVER PRINT SERVICE)
- கலண்டர் கிளிப்போடுதல்
  (SPIRAL CLIP & MATERIAL CLIP) SERVICE



PCC COLOUR DIGTAL PRINTER

இச சேவைகளை அறிமுகப்படுத்துவதில் பெருமையடைகின்றோம்.

தொலைபேசி - 021-228-5935
தொலைநகல் - 021-228-5935

இவை தவிர்ந்த எமது வழமையான சேவைகளாக - புத்தகம், போஸ்ரல், வாழ்த்துமடல், அழைப்பிதழ் என்பன வடிவமைத்து உடனுக்குடன் பதிப்புச் செய்து பெற்றுக் கொள்ளவும், இன்றே நாடுங்கள் - எங்கள் வாடிக்கையாளராகுங்கள்

# மாறுபட்ட கொள்கையுடைய கூட்டணியே புதிய சபாநாயகரைத் தெரிவுசெய்தது!

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



இலங்கையின் பதின்மூன்றாவது நாடாளுமன்றத்தின் சபாநாயகராக டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டாரவை ஒரு புதுமையான கூட்டணி தெரிவுசெய்ததாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலரும், நாடாளுமன்ற உறுப்பி னருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட சபாநாயகருக்கு வாழ்த்துத் தெரிவித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

யானைகள் - புலிகள் - பிக்குகள் - முஸ்லிம்கள் என மாறுபட்ட - புனிதத தன்மையற்ற ஒரு கூட்டணி இணைநதே சபாநாயகர் தெரிவில் வெற்றி பெற்றுள்ளது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழீழத்திற்கு ஆதரவாகவும், ஹெல உறுமயவினர் இலங்கையில் தர்மராஜ்ஜியம் அமைக்கவும் உள்ளதாகக் கூறுகின்றனர்.

இந்த மாறுபட்ட கொள்கைளையுடைய கூட்டமைப்பே சபாநாயகராக டபிள்யூ.ஜே.எம். லொக்கு பண்டாரவைத் தேர்ந்தெடுத்துள்ளது.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி 14 மாவட்டங்களில் ஹெல உறுமயவைத் தோற்கடித்தபோதிலும், அவர்கள் நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்திலேயே ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றிபெறச் செய்துள்ளனர் எனில், இனிவரும் காலங்களில் எந்தப் பாதையில் அவர்கள் செல்லப்போகிறார்கள் என்பது மிகத்தெளிவாகத் தெரிகின்றது.

பிரச்சினைக்குள்ளாகியுள்ள விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை, அவர்களிடம் கையளிக்கப் புதிய சபாநாயகர் ஆர்வமாகவுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழீழத்தை அமைக்க முயற்சி செய்கிறது. முஸ்லிம் காங்கிரஸ் தனியான நிர்வாக அலகொன்றை ஏற்படுத்தவும், ஹெல உறுமய தர்ம ராஜ்ஜியம் ஒன்றை அமைக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

புதிய அமைச்சரவையில்—

## முஸ்லிம் விவகார அமைச்சு ஒதுக்கப்படாததற்கு கண்டனம்!

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தால அண்மையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அமைச்சரவையில் முஸ்லிம் சமய விவகார அமைச்சு ஒ்ழிக்கப்பட்டிருப்பது தொடர்பாக, நாடளாவியரீதியில் பல்வேறு இஸ்லாமிய அமைப்புக்கள் தமது அதிருப்தியையும் கண்டனங்களையும் வெளியிட்டு வருகின்றன.

கடந்த அரசாங்கத்தில் இயங்கியதைப் போன்று புதிய அரசாங்கத்திலும், முஸ்லிம் சமய விவகார அமைச்சை இயக்க பொருத்தமான முஸ்லிம் அமைச்சர் ஒருவரிடம் அமைச்சுப் பொறுப்புக்களை ஒப்படைக்குமாறு இஸ்லாமிய நிறுவனங்கள் - ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

சமூக சேவைகளுக்கான ஏறாவூர் உள்வாரிப் பட்டதாரிகள் சங்கம் இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அவசர தொலைநகல் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது.

---

# உயிருக்கு ஆபத்து இருப்பதால்தான் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லையாம்

## டக்ளஸின் சட்டத்தரணி தெரிவிப்பு

தமது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதால் நீதிமன்றத்தில் ஆஜராகாதநிலை ஏற்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்ததாக களுத்துறை நீதிமன்றத்தில் அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்தார்.

1997 ஆம் ஆண்டு களுத்துறை சிறைச்சாலையிலிருந்த கைதிகளை பார்வையிடுவதற்காக சென்றிருந்த டக்ளஸ் தேவானந்தா சிறைச்சாலை கைதிகளால் தாக்கப்பட்டு காயமடைந்திருந்தார்.

இந்தச் சம்பவம் குறித்த வழக்கு களுத்துறை நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொண்டவேளை டக்ளஸ் தேவானந்தா சார்பில் ஆஜரான சட்டத்தரணி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், களுத்துறை நீதிமன்றில் நடைபெறும் மேற்படி வழக்கை கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு மாற்றி விசாரணை நடத்தினால் ஆஜராகமுடியும் என அவர் தெரிவித்ததாக தெரியவருகின்றது.

---

கிங்ஸ்லி இராசநாயகத்துக்குப் பதிலாக

# புதிய நாடாளுமன்ற உறுப்பினர் நியமனம் செய்யப்படவுள்ளார்!

## மாவை சேனாதிராசா தெரிவிப்பு



இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கிங்ஸ்லி இரசாநாயகத்துக்கு பதிலாக வேறு ஒருவரை நியமிப்பது தொடர்பாகக் கவனம் செலுத்தப்படுவதாகத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

கிங்ஸ்லி இராசநாயகம் பதவியிலிருந்து விலகுவதாகத் தமக்குக் கடிதமூலம் அறிவித்திருப்பதாகவும், இவரின் கடிதத்தை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் பிரியானி விஜயசேகரவிடம் சமர்ப்பித்திருப்பதாக மாவை சேனாதிராசா மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - இந்த இராஜினாமாக் கடிதத்தைத் தாம் பொறுப்பேற்கவில்லை என்று நாடாளுமன்ற செயலாளர் நாயகம் பிரியானி விஜயசேகர தெரிவித்தார். இந்தக் கடிதத்தை தம்மால் பொறுப்பு ஏற்கமுடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டப் பட்டியலில் அடுத்தபடியாக உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நியமிக்கப்படலாம் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

---

# உரிமைகளைப் பாதுகாக்க கிடைத்த வெற்றியே இது!

## பிரதமர் ரணில் கூறுகிறார்



எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்டமை, நாடாளுமன்ற உரிமைகளைப் பாதுகாப்பதற்குக் கிடைத்த வெற்றியாகவே ஐக்கிய தேசியக் கட்சி கருதுகிறது என எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

13 ஆவது நாடாளுமன்றத்தின் சபாநாயகர் தெரிவு கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலுப் தெரிவித்ததாவது-

1960 ஆம் ஆண்டும் எதிர்க்கட்சிக்கு பெரும் பான்மை இருந்தது. அப்போதும் சபாநாயகரைத் தெரிவுசெய்வதில் பெரும் போட்டி நிலவியது. அதுபோலவே இம்முறையும் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார சபாநாயகராக நியமிக்கப்பட்டார்.

இவ்வாறான தெரிவு நாடாளுமன்ற உரிமைகளைப் பாதுகாப்பதற்காகக் கிடைத்துள்ள வெற்றி என்றே கருதுகின்றேன்.

வேறுபாடுகள் பல இருந்தாலும், நாடாளுமன்றத்தில் அனைவரும் ஒன்றாகச் செயற்படுவது அவசியம்.

புதிய நாடாளுமன்றத்திற்கு நாட்டிலுள்ள சகல சமூகங்கள், மதங்கள் மற்றும் பிரிவுகளைச் சேர்ந்தோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்றத்திற்குச் சபாநாயகரைத் தெரிவுசெய்த முறையையிட்டு நான் அதிருப்தி அடைகின்றேன். இந்த தேர்தல் சிறப்பாக நடைபெறவில்லை என அவர் மேலும் தெரிவித்தூர்.

---

# புதிய சபாநாயகர் இப்போது ஐ.தே.க. உறுப்பினரல்ல!

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



புதிய சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்ட டபிள்யு,.ஜே.எம். லொக்கு பண்டாரவுக்கு வாழ்த்துத் தெரிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ -

சபாநாயகராகத தெரிவாகியுள்ள லொக்கு பண்டார இப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்போல செயற்படமுடியாது எனத் தெரிவித்தார்.

சபாநாயகர் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் பொறுப்புடையவராவார்.

லொக்கு பண்டார நீதித்துறை மறறும் நாடாளுமன்ற விவகாரங்களில் கொண்டுள்ள அனுபவத்தின்மூலம், நாடாளுமன்றத்தை வழிநடத்துவார் என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

---

## அரச ஊழியர்களுக்குச் சம்பள அதிகரிப்பு; நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதாம்!

### அமைச்சர் சுசில் பிறேம ஜயந்த

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரும், அமைச்சருமான சுசில் பிறேம ஜயந்த தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்-

ஏற்கனவே உரத்தின விலையை அரசாங்கம் 200 ரூபாவினால் குறைத்துள்ளது. விவசாயிகளின் நன்மை கருதி உரத்தின் விலையை மேலும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் சுசில் பிறேம ஜயந்த மேலும் தெரிவித்தார்.

---

## ஆரியபுலேகொட காலமானார்

தென்மாகாணசபை உறுப்பினரான ஆரிய புலேகொட நேற்றுமுன்தினம் கொழும்பில் காலமானார். 60 வயதான ஆரியபுலேகொட, 1999 ஆம் ஆண்டு தென்மாகாணசபைக்குப் பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் தெரிவானார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் சம்மேளனத்தின் செயலாளராகவும், சுதந்திரக் கட்சியின் பிரதிச் செயலாளராகவும் பதவி வகித்தார்.

இலங்கை முற்போக்கு முன்னணியின் அமைப்பாளராகவும், தலைவராகவும் இவர் பதவி வகித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

# நாடாளுமன்றத்தில் எத்தரப்புடனும் நெருக்கடியை ஏற்படுத்தமாட்டோம்

## ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தினுள் ஜாதிக ஹெல உறுமய தொடர்பாக எவ்வாறான கருத்துக்கள் நிலவினாலும், எவருடனும் தமது உறுப்பினர்கள் நெருக்கடியான நிலையை ஏற்படுத்திக் கொள்ளமாட்டார்கள் என்று ஜாதிக ஹெல உறுமயவின் அதியுயர்பீடத்தின் தலைவரான உடுவே தம்மலோக தேரர் தெரிவித்தார்.

அதியுயர்பீடமான நாடாளுமன்றத்தினுள் நடைமுறைக்கு ஒவ்வாத சில நிகழ்வுகள் நடைபெற்றிருப்பதாகக் கொழும்பு தனியார் ஊடகத்துக்கு அளித்தபேட்டியில் அவர் தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட அப்பரிக்க பஞ்சானதன தேரர் - ஹெல உறுமய சார்பில் பேச எழுந்தபோது, கட்சித் தலைவரே கருத்தைத் தெரிவிக்கவேண்டும் என்று சபாநாயகர் அறிவித்தார்.

பின்னர் ஆளும் கட்சியினரின் இடையூறுக்கு மத்தியில் எல்லாவல மெத்தானந்த தேரர் உரையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## புலனாய்வு பிரிவைச் சேர்ந்தவர் தாக்குதலுக்குள்ளாகி படுகாயம்

இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் வவுனியாவில் வைத்து கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு, படுகாயமடைந்து ஆபத்தானநிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா மகாரம்பைக்குளத்தில் கடந்த 21 ஆம் திகதி இரவு இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

ராஜேந்திரகுமார் (வயது 24) என்ற இராணுவ புலனாய்வு பிரிவு உத்தியோகத்தரே படுகாயமுற்றநிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் அநுராதபுர வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

# சாதனைக்காக ஒருபோதும் நான் விளையாடியதில்லை!

## சச்சின் டெண்டுல்கர் கூறுகின்றார்



(மும்பை)

இந்திய அணியின் நட்சத்திர வீரராக திகழ்பவர் சச்சின் டெண்டுல்கர். இதுவரை டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளை சேர்த்து 447 போட்டிகளில் விளையாடி பல சாதனைகளைப் புரிந்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் 33 சதமும், ஒருநாள் போட்டியில் 37 சதங்களும் அடித்து, உலக கிரிக்கெட்டில் தலைசிறந்த வீரராக திகழ்கிறார்.

டெண்டுல்கருக்கு நேற்று பிறந்த நாள் அவருக்கு கிரிக்கெட் சபைத் தலைவர், வீரர்கள் உட்பட பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர். அவர் 31 ஆவது பிறந்தநாளை மும்பையில் தனது மனைவி அஞ்சலியுடன் கேக் வெட்டி சிறப்பாக கொண்டாடினார்.

அப்போது அவர் கூறியதாவது-

## விளையாட்டு

பிறந்த நாளில் மகிழ்ச்சியாக இருக்கிறேன். சாதனைக்காக நான் ஒருபோதும் விளையாடியது கிடையாது. அணியின் வெற்றியே முக்கியம். பாகிஸ்தான் டெஸ்ட்டில் ராவிட்டின முடிவால் இரட்டைச் சதம் அடிக்க முடியாமல் போனதற்கு எனது வருத்தத்தைத்தான் தெரிவித்தேன்.

மற்றபடி எனக்கும் ராவிட்டுக்கும் எந்தவித தனிப்பட்ட பிரச்சினையும் கிடையாது. முதலில் அணியின் வெற்றிதான். பிறகுதான் மற்றவை. பாகிஸ்தான் தொடர் திருப்தியளிக்கும் வகையில் அமைந்தது. இளமையாக இருக்கவே விரும்புகின்றேன் எனத் தெரிவித்தார்.

# கடந்த ஆண்டின் சிறந்த வீரராக ஜக்கலிஸ் தெரிவாகியுள்ளார்!



தென் ஆபிரிக்க அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் சகலதுறை வீரருமான ஜக்கலிஸ் கடந்த ஒருவரும் ஆண்டின் சிறந்த வீரராக அந்த நாட்டு கிரிக்கெட் சபை தேர்வு செய்துள்ளது.

மேலும் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்ற ஹேஸ்டனும் வேகப்டந்து வீச்சாளர் என்ரினியும் சகலதுறை வீரர் குளுஸ்னரும் சிறந்த வீரராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். ஹேஸ்டன் நியூஸிலாந்து சுற்றுப் பயணத்தில் சிறப்பாக விளையாடியதற்காகவும், குளுஸ்னர், என்ரினி நான்கு நாடுகள் போட்டியில் சிறப்பாக விளையாடியதற்காகவும் இந்த விருது வழங்கப்படுவதாக அந்த நாட்டுக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

## பாடசாலை மாணவர்களுக்கிடையில்

# யாழ்ப்பாண மாவட்ட மட்டத்திற்கான மேசைப்பந்து பட்மின்டன் போட்டிகள்

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே வலய மட்டத்தில் நடாத்தப்பட்ட மேசைப்பந்து, பட்மின்ரன் சுற்றுப்போட்டிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட வீரர்களிடையான மாவட்ட மட்ட மேசைப்பந்து, பட்மின்ரன் சுற்றுப்போட்டிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் 30 ஆம். திகதி வரை யாழ்.மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேசைப்பந்து சுற்றுப்போட்டி 28 ஆம் திகதியும், பட்மின்ரன் சுற்றுப்போட்டி 29 ஆம், 30 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளது. (58)

# காஷ்மீரில் காங்கிரஸ் அலுவலகம் மீது தீவிரவாதிகள் கைக்குண்டுத் தாக்குதல்!

காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில், உள்ள காங்கிரஸ் தலைமையலுவலகம் மீது, தீவிரவாதிகள் தாக்குதலை நடத்தினார்கள். நேற்றுமுன்தினம் பகல் 1.10 மணியளவில் திடீரென்று வந்த தீவிரவாதிகள், காங்கிரஸ் அலுவலகத்தின் பிரதான நுழைவுவாசல் மீது வெடிகுண்டுகளை வீசினர். அத்துடன் இயந்திரத் துப்பாக்கியால், கண்மூடித்தனமாகச் சுட்டபடி, உள்ளே நுழைய முயன்றனர்.



உடனே அங்கு காவலுக்கு நின்ற பாதுகாப்புப் படையினர் தீவிரவாதிகளை நோக்கித் திருப்பிச்சுட்டனர். இருதரப்பினருக்கும் இடையே சிறிது நேரம் துப்பாக்கிச் சண்டை நடந்தது.

பாதுகாப்புப் படையினரின் தாக்குதலைச் சமாளிக்கமுடியாததால், தீவிரவாதிகள் காங்கிரஸ் அலுவலகத்துக்குள் நுழையும் முயற்சியைக் கைவிட்டு, அருகில் உள்ள ஒரு கட்டடத்துக்குள் சென்று மறைந்துகொண்டனர்.

தீவிரவாதிகள் வீசிய குண்டுகள் வெடித்ததில், ஒரு துணைப்பொலிஸ் அதிகாரி, மற்றும் ஆறு பாதுகாப்புப் படையினர், உட்பட 20 பேர் காயமடைந்தனர்.

இதேவேளை ஸ்ரீ நகரில் தேசியமாநாட்டுக் கட்சியின், தலைவர் உமர் அப்துல்லாவுக்காக நேற்று முன்தினம் அக்கட்சித் தொண்டர்கள் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டனர். இதற்காக அவர்கள் ஒரு பேரூந்தை வாடகைக்கு அமர்த்தியிருந்தனர்.

அவர்கள் சென்ற பேரூந்தின்மீது, தீவிரவாதிகள் வெடிகுண்டை வீசினார்கள். இதில் அந்த பேரூந்தும் பாதுகாப்புக்குச் சென்ற பொலிஸ் வாகனமும் சேதமடைந்தன. இந்தத் தாக் குதலில் ஒரு பொலிஸ்காரர் உட்பட பொதுமக்கள் ஐந்துபேர் காயமடைந்தனர். தேசியமாநாட்டுக் கட்சித் தொண்டர்கள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

## பாகிஸ்தான் தொடரில்

# சிறப்பாகப் பந்து வீசிய பாலாஜிக்கு தமிழ்நாட்டில் பாராட்டு விழா!

இந்திய அணியில் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவராக திகழ்பவர் பாலாஜி. இவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். பாகிஸ்தான் பயணத்தின் போது சிறப்பாகப் பந்து வீசிய பாலாஜிக்கு நேற்று முன்தினம் சென்னை எம்.சி.ஏ.சிதம்பரம் கிரிக்கெட் விளையாட்டரங்கில் பாராட்டு விழா நடந்தது.

இந்த விழாவை தழிழ்நாடு கிரிக்கெட்சங்கம் ஏற்பாடு செய்து இருந்தது. விழாவில்,தழிழ்நாடு கிரிக்கெட் சங்க தலைவர் சீனிவாசன், முன்னாள் வீரர்களான ஸ்ரீகாந்த் வெங்கட்ராகவன்,தழிழ்நாடு கிரிக்கெட் அணி கப்டன் சுரேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

விழாவில் பாகிஸ்தான் தொடரில் சிறப்பாக ஆடிய பாலாஜிக்கு பரிசுத் தொகை ரூ.1லட்சம் வழங்கப்பட்டது. அவருக்கு மாலையும் மலர்கிரீடமும் அணிவிக்கப்பட்டது.

இதில் தமிழக வீரர் பாலாஜி அக்தருக்கு இணையாக பந்து வீசுகிறார். அவர் பாகிஸ்தானில் சிறப்பாக பந்துவீசினார். இதனால் அவர் தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் ஆகிவிட்டார் என பலர் பாராட்டினார்கள்.

முன்னாள் ஆரம்ப ஆட்டக்காரர் ஸ்ரீகாந்த் கூறும்போது, பாலாஜி சிறந்த பந்துவீச்சாளர் என்பதை நிரூபித்துவிட்டார், தமிழ்நாடு வீரர் அணியில் இருப்பது பெருமை அளிக்கிறது. அவர் வளரும் பந்துவீச்சாளர்களுக்கு முன் மாதிரியாக உள்ளார் என்றார். பாலாஜி பாகிஸ்தான் தொடரில் 12 விக்கெட்டுகள் வீழ்த்தி டெஸ்ட் தொடரில் இந்தியா வெற்றி பெற காரணமாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி முடிவுகள்

யாழ். மாவட்டத்தில் பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் நடைபெற்ற வலைப்பந்தாட்ட போட்டி முடிவுகள் வருமாறு -

15 வயதுப் பிரிவில் 1 ஆம் இடத்தை யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும், 2 ஆம் இடத்தை யா/வட இந்துமகளிர் கல்லூரியும், 3 ஆம் இடத்தை யா/யூனியன் கல்லூரியும் பெற்றது.

17 வயதுப் பிரிவில் 1 ஆம் இடத்தை யா/யூனியன் கல்லூரியும், 2 ஆம் இடத்தை யா/உடுவில் மகளிர் கல்லூரியும், 3 ஆம் இடத்தை யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்பாடசாலையும் பெற்றது.

19 வயதுப் பிரிவில் 1 ஆம் இடத்தை யா/யூனியன் கல்லூரியும், 2 ஆம் இடத்தை இராமநாதன் மகளிர் கல்லூரியும், 3 ஆம் இடத்தை யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்பாடசாலையும் பெற்றது.

இதில் முதல் இரு இடங்களையும் பெற்ற பாடசாலைகள் மாகாணப் போட்டிக்கு தெரிவாகியுள்ளன எனவும், ஜூலை மாதத்தின் முதல் வாரத்தில் வவுனியா நகரசபை மைதானத்தில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளது எனவும், யாழ்.மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுக்குழுச் செயலாளர் தெரிவித்துள்ளார். (12)



# தமிழ் கற்பதற்கான கணினி மென்பொருள்

தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி உலகினையே விஞ்சிநிற்கும் 21 ஆம் நூற்றாண்டில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இன்றைய கணினியுகம் மனிதனுடைய வாழ்கைமுறைமையினையே மாற்றியமைக்கும் அளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது.

இன்று கணினிகள் அனைத்துத் துறைகளிலும் உலகைச் சிறைப்படுத்தியுள்ளன. இத்தகைய கணினிகளுக்கான மென்பொருட்களும் **(Soft ware)** புதிய தொழில் நுட்பங்களுடன் நாளாந்தம் உருவாக்கப்பட்டு வருகின்றன.

காலத்தின் தேவை கருதி கணினிமூலம் தமிழ்மொழியைக் கற்பதற்கான மென்பொருட்கள் பல தற்பொழுது உருவாக்கப்பட்டு வருகின்றன. கடந்த கால யுத்தம் காரணமாக உலகின் ஒவ்வொரு மூலைகளிலும் புலம்பெயர்ந்து வாழும் எமது தமிழ் மக்கள் தமது பிள்ளைகளுக்குத் தமிழ் மொழியினைக் கற்பிப்பதற்கு சிம் மென்பொருட்கள் இன்றியமையாதனவாகின்றன.

இன்று எமது மக்கள் புலம்பெயர்ந்து வாழும் ஐரோப்பிய நாடுகளில் கணினிமூலம் கற்பிப்பதற்குப் பயன்படுத்தும் அனைத்துக் கணினி மென்பொருட்களும் இந்தியாவிலிருந்தே பெறப்படுகின்றன.

இந்தவகையில், காலத்தின் தேவை கருதி யாழ்.குடாநாட்டின் மானிப்பாய்ப் பகுதியில் வசிக்கும் 23 வயதுடைய இளம் தகவல் தொழில் நுட்பவியலாளனான செ.செல்வதாசன் உருவாக்கியுள்ள 'பாலர் பள்ளி 2004' தமிழ் கற்பதற்கான கணினி மென்பொருளின் அறிமுக விழா இன்று பிற்பகல் 3.00 மணிக்கு மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் தகவல் தொழில்நுட்ப ஆசிரியரான செ.செல்வதாசன் மிகவும் இளவயதில் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏதாவது சாதிக்கவேண்டும் என்ற நோக்கில் தனது சொந்த முயற்சியில் இந்த மென்பொருளை உருவாக்கியிருப்பது பாராட்டுதற்குரிய விடயமாகும்.

இந்த மென்பொருளானது தமிழ் நெடுங்கணக்கு எழுத்துக்கள் ஒவ்வொன்றைப் பற்றிய விளக்கங்களைத் தருகின்றது. அத்துடன், ஒவ்வொரு எழுத்துக்களையும் எவ்வாறு எழுதுவது என்கின்ற விளக்கத்தினைத் தருவதோடு, எவ்வாறு எழுத்துக்களைக் கொண்டு சொற்களை அமைப்பது என்கின்ற விளக்கத்தையும் தருவனவாக அமையும்.

இந்த மென்பொருளைக் கணினியில் நிறுவுவதன் **(Install)** மூலம் சிறுவர்கள் எவரது துணையுமின்றித் தாமாகவே தமிழ்மொழியைக் கற்க முடியும். தமிழ்மொழி பற்றிய ஆரம்ப அறிவு இல்லாத வெளிநாட்டவர்கள்கூட, இந்த மென்பொருளின் உத்வியுடன் தமிழ்மொழியைக் கற்கமுடியும்.




புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் மக்கள் தமது பிள்ளைகளுக்கு தமிழ்மொழி அறிவைச் செவ்வனே ஊட்டவேண்டும் என்ற தூரநோக்கில், இந்த இளம் தகவல் தொழில்நுட்பவியலாளன்- 'காலத்தின் கண்ணே செய்த முயற்றி ஞாலத்தின் கண் மாணப்பெரிது'.

புலம்பெயர்ந்த மக்களைப் பொறுத்தவரையில் அவர்களது குழந்தைகள் பேச்சளவில் தமிழ்மொழியில் ஓரளவு திறமையுடையவர்களாகக் காணப்படுகின்றபோதும், தமிழ்மொழியின் எழுத்து வழக்கு என்பது இவர்களிடையே பெரும்பாலும் குறைந்தே வருகின்றது. எனவே, ஆசிரியர் செ.செல்வதாசன் தமிழினத்துக்கும், தமிழ் மொழிக்கும் அளப்பரிய தொண்டாற்றியுள்ளார் என்பது மிகையாகாது.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# 33 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும்

## கல்விச்சேவை ஆணைக்குழு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளிலே தொண்டராசிரியர்களாகப் பணியாற்றும் 33 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுத்துவருவதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

இவ்வாறு நியமனம் வழங்கப் படுவோரில் 21 தொண்டர் ஆசிரியர்கள் தேசிய பாடசாலைகளில் பணியாற்றி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கான நிரந்தர நியமனம் மாகாணப் பாடசாலைகளில் வழங்கப்படவுள்ளது.

12 பேருக்கான நியமனம் தென்மாகாணப் பாடசாலைகளிலும், மீதி 22 பேருக்கான நியமனம் தென்மராட்சிப் பகுதியிலுள்ள பாடசாலைகளிலும் வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே மாகாணக் கல்வி அமைச்சு 78 தொண்டர் ஆசிரியர்கள் தொடர்பான விபரங்களை கல்விச்சேவைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் இவர்களில் 45 பேர் தொடர்பான விபரங்களை கல்விச்சேவை ஆணைக்குழு பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலைக்கு சென்னையில் வசிக்கும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கருணாகரன் தம்பதிகள் 30 லட்சம் ரூபா பெறுமதியான காணியை அன்பளிப்புச் செய்துள்ளனர். இந்தக் காணியின் உறுதியை கருணாகரன் தம்பதிகள் சார்பில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் மாவட்ட வைத்திய அதிகாரி கே.மயிலேறும் பெருமாளிடம் கையளிக்கிறார். (17)

### மட்டக்களப்பு - மாவடிவேம்பு பகுதியில்

# கிரனேட், துப்பாக்கி, ரவைகளுடன் கைதானவருக்கு விளக்கமறியல்!

மட்டக்களப்பு - மாவடிவேம்பு பிரதான வீதியில் கைக்குண்டு, துப்பாக்கி, ரவைகள் ஆகியவற்றுடன் கைதுசெய்யப்பட்ட இளைஞர் ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு மஜிஸ்ரேட் நீதிமன்ற நீதிவான் என்.எச்.எம்.அஸ்மீா உத்தரவிட்டார்.

பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் உரப்பையுடன் சென்ற இளைஞரைச் சோதனையிட்டபோதே கைக்குண்டு ஒன்று, ரி-56 ரக துப்பாக்கி ரவைகள் 180, மகஸீன்கள் 6 என்பன இந்த இளைஞரிடமிருந்து மீட்கப்பட்டன.

கைதுசெய்யப்பட்டவர் காளிகோவில் வீதி - மாவடிவேம்பைச் சேர்ந்த பரசுராமன் நவரத்தினம் என்றும், தொப்பிகலவிலுள்ள புலிகள் முகாமில் இவற்றைக் கண்டெடுத்தாகவும் சந்தேகநபர் வாக்குமூலம் அளித்துள்ளார் என பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

நீதிமன்றம் இவரை மே மாதம் 7 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

# விசேட தேவைக்குரியவர்களுக்கு தொழில்வாய்ப்பு வழங்க நடவடிக்கை!

விசேட தேவைக்குரியவர்களுக்கு தொழில் நிலையங்களை அமைத்து அவற்றினூடாக வேலை வாய்ப்பு வழங்க முயற்சிகள் எடுக்கப்பட்டுவருவதாக, யாழ்.செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற விசேட தேவைக்குரியோரை அபிவிருத்திசெய்தல் தொடர்பான கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

விசேட தேவைக்குரியவர்களாகிய அங்கவீனர்களுக்குத் தொழிற் பயிற்சியை மட்டும் அளித்துவிட்டு அவர்களை வீடுகளில் இருக்கச் செய்வதில் பலனில்லை என்பதால் அவர்களது வாழ்வு வளம் பெறுவதற்கும், அவர்களுக்கு தொழில் வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வதற்காகவும் பல்வேறு கைத்தொழில்வள நிலையங்கள அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் விசேட தேவைக்குரியோருக்குப் பயிற்சிகளை வழங்குவதற்கு ஒரு லட்சத்து 65 ஆயிரம் பேர் வரையில் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், இததொகை பற்றாக் குறையாகவே உள்ளது.

மேலும் அதிக நிதி ஒதுக்கீடு மேற்கொண்டு யாழ். மாவட்டத்தில் உள்ள அங்கவீனமுற்றோரை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# ஐஸ் தொழிற்சாலைகள் இயங்காததால் மீனவர்களின் தொழில் பாதிப்படைகிறது!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலுள்ள ஐஸ் தொழிற்சாலைகள் இராணுவ நடவடிக்கையால் - அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் அவை தொழிற்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் யாழ். குடாநாட்டு மீனவர்கள் பிடிக்கும் மீன்களை குளிரூட்டி வைப்பதற்கும் அவற்றை ஏற்றுமதி செய்வதற்கும் போதிய வசதிகள் இல்லாது பெரும் சிரமத்தை எதிர்கொண்டுவந்தனர்.

இது தொடர்பாக மீனவ சமாசங்கள் எடுத்து கொண்டு பெரும் முயற்சி காரணமாக உலக உணவு ஸ்தாபனம் 18 மில்லியன் பெறுமதியான 6 கூலர்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

இவை வடமராட்சி, யாழ்ப்பாணம், தீவகம் ஆகிய மூன்று சமாசங்கள்களுக்கும் தலா 2 வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

இந்த கூலர் மூலம் தாம் பிடிக்கும் மீன்களை குளிரூட்டி கொழும்புக்கு நேரடியாக அனுப்பி அதிலிருந்து அதிக லாபத்தை பெற்றுக் கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (17)

### இத்தாலியிலிருந்து திரும்பிய

# சட்டவிரோத குடியேற்றவாசிகள் விடுவிக்கக்கோரி மனுத்தாக்கல்

இத்தாலியிலிருந்து நாடுகடத்தப்பட்ட 30 சட்டவிரோத குடியேற்றவாசிகள் - தம்மை விளக்கமறியலில் இருந்து விடுவிக்கவேண்டும் என்று மேல் முறையீட்டு நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

சட்டமா அதிபர் மற்றும் கட்டுநாயக்க விமான நிலையத்திலுள்ள குற்றப்புலனாய்வு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு எதிராக இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 23 ஆம் திகதி இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்ட இந்த சட்டவிரோத குடியேற்றவாசிகளே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

### நெடுந்தீவுப் பிரதேசத்தில்

# குழாய் மூலம் வழங்கப்படும் குடிநீர் உவர்த்தன்மை அடைந்து வருகிறது!

நெடுந்தீவில் குழாய் மூலம் விநியோகிக்கப்பட்டுவரும் குடிநீா, கடந்த சில நாட்களாக உவநீர்த்தன்மை அடைந்து வருகின்றது.

இவ்வருடம் மழைவீழ்ச்சி குறைந்த காரணத்தினாலும், மக்கள் மற்றும் இங்கு நிலைகொண்டுள்ள படையினரும் குடிநீரை பிறதேவைகளுக்குப் பயன்படுத்துவதாலும் நீா வீண்விரயமாகி உவர்த்தன்மை அடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் மாதங்கள் மிகவும் வரட்சிக் காலமாதலால் இந்தக் குடிநீா மக்கள் பாவனைக்கு உதவாத நிலை ஏற்படலாம் என்பதுடன், குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடான நிலையும் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளதென அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய இந்த நிலையை உணர்ந்து, அனைவரும் குடிநீரை சிக்கனமாகப் பாவித்தால் சிறிது காலம் தற்போதைய தன்மையுடன் நீரைப் பெறலாம் என சுட்டிக்காட்டப்படுகிறது. (113)

# மனித உரிமைகள் தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் அனுசரணையுடன் நடைபெறும் மனிதஉரிமைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், உபதலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் ஆகியோரைத் தவறாது கலந்துகொள்ளுமாறு உதவி ஆணையாளர் அழைப்பு விடுத்துள்ளார். (44)




தென்புலோலியூர் க.தம்பையாவின் 'ஐம்பதிலும் ஆசைவரும' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா அண்மையில் நல்லை ஆதீன மண்டபத்தில் நடை பெற்றது. இதில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கு சிறப்புப் பிரதியை வழங்குவதையும் நடுவில் நூலாசிரியர் தம்பையாவையும் காணலாம். (17)

# செய்தித் துளிகள்

## கத்தியைக் காட்டி சிறுமியிடமிருந்து நகை அபகரிப்பு!

(கொக்குவில்)

மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் கத்தியைக் காட்டி சிறுமி அணிந்திருந்த காப்பு, சங்கிலி ஆகியவற்றை அபகரித்த சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நாச்சிமார் கோவிலடி ஒழுங்கையில் நடைபெற்றது.

அதே பகுதியைச் சேர்ந்த செல்வரட்ணம் கீர்த்திகா (வயது 09) என்றும் சிறுமி சாப்பாட்டுக்கு தயிர் வாங்கச் சென்றபோதே, நகைகளைப் பறிகொடுத்ததாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (206)

## கட்டைக்காடு சந்தியில் பஸ்தரிப்பு நிலையம்!

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கில் கட்டைக்காட்டு சந்தியில் பஸ்தரிப்பு நிலையம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

மேஜர் தணிகை மாறன், வீரவேங்கை தணிகைமாறன் ஆகியோரது நினைவாகவே திறந்துவைக்கப்பட்டது.

வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளரும், வடமராட்சி கிழக்கு தேவாலய பங்குதந்தையும் நாடாவினை வெட்டி திறந்து வைத்தார்கள். (17)

## நாய்களால் தொல்லை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதால் பாதைகளில் பிரயாணம் செய்வோர் பெரும் அவலப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறை பிரதேசத்திற்கு உட்பட்ட பிரதேசங்களான புலோலி தெற்கு, மந்திகை, குரும்பசிட்டி, கிராமக்கோட்டடி இராணுவ முகாம் *அண்டியுள்ள பகுதிகள், ஈ.பி.டி.பி.* முகாம் ஆகிய பகுதிகளில் மாலை நேரங்களில் மக்கள் பயணம் செய்ய முடியாது நிலையுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்டாக்காலி நாய்களுக்கு எதிராக பருத்தித்துறை பிரதேச சபை எந்தவித நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை என மக்கள் விசனம் தெரிவித்தனர்.

மந்திகை மருத்துவமனையில் நாளாந்தம் நாய்க்கடிக்கு இலக்காகி சிகிச்சை பெற்றுவருபவர்கள் அதிகரித்துள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (17)

## சாவகச்சேரியில் குறைந்த கட்டணத்தில் மருத்து சேவை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் குறைந்த கட்டணத்தில் மருத்துவசேவையை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

முதற்கட்டமாக இந்த மருத்துவ சேவையில் கடமை மாற்றக்கூடிய மருத்துவரை நியமித்து படிப்படியாக அனைத்து மருத்துவ சேவைகளையும் வழங்கவுள்ளதாக சங்கத் தலைவர் க.ந.பாலச்சந்திரன் தெரிவித்தார். (34)

## மணக்கோல பெருவிழா

அல்வாய் கிழக்கு பெருங்கலட்டி தில்லையம்பதி பிள்ளையார் மணக்கோலப் பெருவிழா, சகஸ்ர சங்காபிஷேகத்துடனும், திருவூஞ்சல் உற்சவத்துடனும் நாளை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது. (116)

## வருடாந்த உற்சவம்

(நவிண்டில்)

உடுப்பிட்டி துவாளி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (116)

## மருதங்கேணியில் சமுர்த்தி வங்கி!

மருதங்கேணி சமுர்த்தி வங்கிக்கான புதிய கட்டடம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

10 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுவரும் இந்த வங்கி இதற்கென ஒதுக்கப்பட்ட காணியில் அமைக்கப்படுகிறது. வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்க சமாசத்தின் தலைமை காரியாலயத்திற்கு அருகில் இந்தக் கட்டடம் அமைக்கப் பட்டுவருகிறது.

இந்த வங்கி மருதங்கேணியில் தனியார் வீடு ஒன்றில் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (17)

## இலங்கை விகடன் பங்குகள் அறிமுகம்!

இலங்கை விகடன் வார செய்திப் பத்திரிகை பங்குகள் அறிமுக நிகழ்வு இன்று பிற்பகல் 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

தொடக்கவுரையை காங்கேசன் துறை மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் பொன். கணேசமூர்த்தியும் தலைமையுரையை யாழ். பல்கலைகழக 'உபவேந்தர் மோகனதாஸும் தொகுப்புரையை பேராசிரியர் எஸ்.சண்முகதாஸும் நிகழ்த்துவர்.



# விளையாட்டு அரங்கம்

## லாராவின் பாதை

| ஓட்டம் | நிமிடம் | பந்து | 4 | 6 |
|---|---|---|---|---|
| 50 | 115 | 61 | 7 | - |
| 100 | 192 | 131 | 13 | - |
| 150 | 278 | 199 | 18 | - |
| 200 | 387 | 260 | 22 | - |
| 250 | 479 | 323 | 27 | 2 |
| 300 | 576 | 404 | 34 | 2 |
| 350 | 678 | 494 | 39 | 3 |
| 384 | 728 | 546 | 42 | 4 |
| 400 | 773 | 582 | 43 | 4 |

ஹைடனின் சாதனைச் சமன் 374 இல் இருந்து 380 ஒரு சிக்ஸருடன். ஹைடனின் சாதனை முறியடிப்பு 380 இல் இருந்து 384 ஒரு பவுண்டரியுடன். வரலாற்றுச் சாதனை முறியடிப்பு 349 இல் இருந்து 400 பைன்லெக்புறம் ஒரு ஓட்டம்.

# காவிய நாயகன் லாரா



“இரண்டாம் முறை முச்சதம்”

கரிபியன்தீவுகளில் 1968 ஆம் ஆண்டின் பின் டெஸ்ட் தொடர் ஒன்றை இங்கிலாந்து வென்றிருக்கிறது. பாகிஸ்தான் மண்ணில் வைத்து இந்தியா டெஸ்ட் தொடரை வென்றிருக்கிறது. சிம்பாப்வே அணி அரசியல் நெருக்கடிகளால் சிதைவடையப்போகிறது. இப்படியெல்லாம் முக்கியத்துவம் வாய்ந்த கிரிக்கெட் செய்திகள் வந்து கொண்டிருக்கும்வேளையில், இவற்றையெல்லாம் தாண்டி முனைப்புப்பெற்ற ஒரு சம்பவம் கிரிக்கெட் உலகில் நடைபெற்றது.

மேற்கிந்தியக் கிரிக்கெட் அணித் தலைவர் நான்காவதும் இறுதிப் போட்டியுமான இறுதி டெஸ்ட் போட்டியில் விளையாட அன்ரிகுவாவின் - சென். ஜோன்ஸில் ரிக்ரியேஷன் கிளப் மைதானத்தில் இறங்கும்போதே இந்த நிகழ்வு அவரின் இதயத்துக்குத் தெரிந்திருக்கிறதுபோல இருக்கிறது. ஆனால், நினைத்ததை நடாத்திக் காட்டியது தான் அபாரம். உலகக் கிரிக்கெட் வரலாற்றிலேயே தனியொருவராக 400 ஓட்டங்கள் பெற்றவர் ஒருவர் மட்டுமே. அவர்தான் மேற்கிந்தியக் கிரிக்கெட் அணித் தலைவர் பிறைன் சார்ல்ஸ் லாரா.

தென் அமெரிக்கக் கண்டத்தின் வடபால் அமைந்துள்ள டிரினாட்தீவு நாட்டைத் தாயகமாகக் கொண்டவர். சரியாகப் பத்து வருடங்களுக்கு முன் (1994) இதே மைதானத்தில் இன்னொரு மேற்கிந்தியக் கிரிக்கெட் ஜாம்பவானாகிய சேர்.கார்பீல்ட் சோபர்சின் (1958) 365 சாதனையை, 375 ஓட்டங்கள் சேர்த்து முறியடித்தவர். அந்தச் சம்பவம் பற்றி நினைவுகூரும் லாரா - சாதனை முறியடிக்கப்பட்ட அன்று காலை நானும், சோபர்சும் அதிகாலையிலேயே ஒன்றாகக் கோல்ப் விளையாடினோம். அதன் பின்னர்தான் சாதனையை முறியடித்தேன். அப்போது எனக்கு வயது 24. இப்போது 34. அந்தளவு உற்சாகத்துடன் இன்று என்னால் எழுந்திருக்கமுடியவில்லை என்கிறார்.

பத்தாண்டுகளுக்கு முன் லாரா முறியடித்த சாதனை கடந்த ஒக்ரோபரில் அவுஸ்ரேலிய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மத்தியூ ஹைடனால சிம்பாப்வேக்கு எதிரான ஆட்டத்தில் (380) முறியடிக்கப்பட்டது. ஆனால், இதோ பிறைன் லாரா மீண்டும் சாதனை படைத்துவிட்டு நிமிர்ந்து நிற்கிறார். டெஸ்ட் வரலாற்றில் இரு முறை முச்சதம் போட்டவர்கள் இருவர் மட்டுமே. ஒருவர் டொன் பிரட்மன் மற்றவர் லாரா. அதிலும் 36 வருடங்களுக்கு முன் நடைபெற்ற சாதனையை லாரா முறியடிக்க, அந்தச் சாதனையை 10 வருடங்களின் பின் மத்தியூ ஹைடன் முறியடிக்க ஆறே ஆறு மாதத்தில் ஹைடனின் சாதனையை முறியடித்துவிட்டு நிமிர்ந்து நிற்கிறார் லாரா.



“வானம் என் வசம்”

ஆனால் சில மேற்கிந்திய கிரிகெட் பிரபலங்கள் லாராவை தலைமைப் பதவியில் இருந்து நீக்கவேண்டும், அணியில் இருந்து நீக்க வேண்டும். சர்வான் அல்லது சந்தர் போல் அணித்தலைவராக வரவேணடும். லாராவின் காலம் முடிந்துவிட்டது. ஓம் சாந்தி என்ற குரல்கள் பெரிதாக எழுந்தவேளையிலேயே, இயேசு பிரான் உயிர்த்தெழுந்த அதே நாட்களில் பிறைன் லாரா உயிர்த்தெழுந்திருக்கிறார். அவருக்கு நம்பிக்கையளிக்க, ஆதவரளிக்க ஆட்கள் இல்லாமல் போகவில்லை. மூன்று டெஸ்ட் போட்டிகளில் தோற்று, நான்காவது டெஸ்ட் போட்டிக்கு முகம் கொடுத்தபோது, லாராவுக்கு நம்பிக்கையூட்டியவர்கள் சேர்.விவியன் றிச்சட்ஸ், சேர். காபீல்ட் சோபர்ஸ், சேர்.கிளைவ் லொயிட் இதைவிட வேறென்ன பலம் வேண்டும் லாராவுக்கு?

லாராவின் ஆட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள், சில விமர்சகர்கள்- தாங்கள் முள்ளின் மேல் நின்றதாகச் சுவையான சந்தர்ப்பங்களை நினைவு கூருகிறார்கள். இதற்கொரு காரணம் உண்டு - எந்தவொரு



“376 ~ கிரீடம் என் வசம்”

பந்துவீச்சாளரையும் மதித்துத் கௌரவிக்கும் எண்ணமே இல்லாமல், சர்வசாதாரணமாக ஓட்டங்களைக் குவித்த வண்ணம் இருந்தார் லாரா. தயக்க முறும் 90 கள், அதற்கப்பால் 200, 300, 400 என்ற இலக்குகளை நெருங்கும்வேளை, அதற்குரிய கௌரவம் கொடுக்க வேண்டும் என்ற சிந்தனை, பயம், தளர்வு எதுவுமே லாராவிடம் இருக்கவில்லை. 374 இல் நின்ற லாரா, ஹைடனின் 380 இற்குச் சமப்படுத்தியது - ஒரு சிக்சர்மூலம். இந்தத் துணிவு யாருக்கு வரும். சச்சினுக்கு அல்லது ஹைடனுக்கு? இங்குதான் பிறைன் லாரா வித்தியாசமாகத் தெரிகின்றார்.

இன்று உலகின் முதல்தரத் துடுப்பாட்ட வீரராக எதுவித ஒப்பீடுகளுமின்றிக் கிரீடம் அணிந்துகொள்கிறார்.

அப்படித்தான் ஒப்பிடவேண்டுமாயின் - அண்மைய வாரங்களில் சர்வதேச அரங்கின் மூன்று எண்ணிக்கைகள் பொருத்தமாக இருக்கும். சச்சின் டெண்டுல்கர் 194 (348), ஷேவாக் 309 (375), லாரா 400 (582).

தற்போது உலகெங்குமிருந்து லாராவை நோக்கிப் புகழாரங்கள் குவிந்த வண்ணம் இருக்கின்றன. முத்தாய்ப்பாக ICC யின் தலைவர் இஷான் மாணியின் வாழ்த்துச் செய்தியின் ஒரு பகுதியைக் குறிப்பிடலாம் -

“நூற்றாண்டு கண்ட கிரிக்கெட் ஆட்ட வரலாற்றில், நீங்கள் அற்புதமான புதிய அத்தியாயத்தை எழுதிவிட்டீர்கள். உங்கள் சாதனை வியப்புக்குரியது. வாழ்த்துக்கள்...” என்று செல்கிறது அந்தச் செய்தி.



“சிலருக்குப் பொறுக்குதில்லையே”

இதெல்லாம் இருக்க பிறைன் லாரா இன்னும் என்னென்ன செய்ய இருக்கிறாரோ, கிரிக்கெட் உலகம் இன்னும் என்னென்ன செய்ய இருக்கின்றதோ யார் அறிவார்?

- ஜோசப் கிருஷ்ணா -

# மனதைத் தூசு தட்டுங்கள்

உலக சம்பியன்களான அவுஸ்ரேலிய அணியினரிடமுள்ள திறமைகளுக்கு ஏற்ப அவர்களிடம் விளையாட்டு மனப்பான்மை இல்லாதிருப்பது அண்மைய காலங்களாக அவதானிக்கப்பட்டுவருகிறது.

போட்டிகளின்போதும், மைதானத்துக்கு உள்ளேயும், வெளியேயும் அவர்கள் தெரிவிக்கும் கருத்துக்களிலும் - ஒரு சிறந்த அணி என்பதற்கு அப்பால் ஒரு சிறந்த அணிக்கான விளையாட்டு மனப்பான்மை அவுஸ்ரேலிய அணியினிடம் தெரிவதில்லை.

ஒரு நல்ல வீரன் வெற்றியையும், தோல்வியையும் சமமாக மதிப்பதோடு, ஏனைய வீரர்களின் திறமையையும் மதிப்பவனாகவும் இருக்கவேண்டும்.

கடந்தவாரம் அன்ரிகுவாவில் இங்கிலாந்து அணிக்கு எதிராக மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவர் பிறைன் லாரா ஆட்டமிழக்காது 400 ஓட்டங்களை எடுத்து, டெஸ்ட் வரலாற்றில் மீண்டும் ஒரு சாதனையைப் படைத்தார்.

இவரது சாதனை தொடர்பாக கருத்துத் தெரிவித்த அவுஸ்ரேலிய அணியின் விக்கெட் காப்பாளர் கில்கிறிஸ்ட் - தமது அணியின் வீரர் மத்தியூ ஹைடன் - லாரா 400 ஓட்டங்களை பெற்றுக்கொள்ள எடுத்த 13 மணித்தியாலத்துக்குள்ளாகவே அந்தச் சாதனையை முறியடிப்பார் எனத் தெரிவித்தார்.

இதுபோல லாராவின் சாதனையைப் பற்றிக் கருத்துத் தெரிவித்த அவுஸ்ரேலிய அணியின் கப்டன் ரிக்கி பொண்டிங் - லாரா அணிக்காக விளையாடவில்லை. தனது சுய நலத்துக்காக 13 மணித்தியாலங்கள் களத்தில் நின்று ஆடினார். இதனாலேயே மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெறாமற் போனது என்று தெரிவித்த இந்தக் கருத்து ‘ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுவது போல’ இருக்கிறது.

இவர்கள் இருவருடைய கருத்துக்களிலும் காழ்ப்புணர்வே மிஞ்சி நிற்கின்றது. ஒரு வெள்ளை இனத்தவர் இந்தச் சாதனையைப் படைத்திருந்தால், அதைப்பற்றி அவுஸ்ரேலிய வீரர்கள் முதல் பத்திரிகை வரை வாழ்த்துப் பாடி இருப்பார்கள். ஆனால், ஒரு கறுப்பினத்தவர் இந்தச் சாதனையைப் படைத்தது அவுஸ்ரேலிய அணியினரால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அதற்கு அப்பால் எல்லாவற்றிலும் தாமே சாதனை படைக்கவேண்டும் என எண்ணும் அணியினருக்குத் தமது அணி வீரரான ஹைடனின் சாதனையை லாரா முறியடித்தது பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இங்கு பொண்டிங் - ஹைடன் 10 மணித்தியாலங்களிலேயே 380 ஓட்டங்களைப் பெற்றதாகவும், லாரா தனது நலத்துக்காக 13 மணித்தியாலங்களுக்குமேல் நின்று ஆடியதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார். இங்கு ஒரு விடயம் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

கடந்த ஒக்ரோபர் மாதம் பேர்த்தில் ஹைடன் பெற்றுக்கொண்ட 380 ஓட்டங்களானது, பலம் குறைந்த சிம்பாப்வே அணிக்கு எதிராகப் பெற்றுக்கொண்டது. லாரா பெற்றுக்கொண்ட 400 ஓட்டமானது - கிரிக்கெட்டின் தாயகமான இங்கிலாந்துக்கு எதிராகப் பெற்றுக்கொண்டது. முதல் மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் மேற்கிந்திய அணியைச் சரித்த பிளின்டோவ், ஹோகாட் போன்ற சிறந்த பந்துவீச்சாளர்களை சிம்பாப்வே அணியின் பந்து வீச்சாளர்களுடன் ஒப்பிடமுடியாது. அதுவும் முதல் இரு டெஸ்ட் தொடர்களிலும் தூள் கிளப்பிய பந்துவீச்சாளர்களை எதிர்த்து லாரா பெற்றுக்கொண்ட 400 ஓட்டங்களே இறுதிப் போட்டியையும் சமநிலைப்படுத்த உதவியது.



டொண் பிரட்மன்
“இவர் பிறந்த மண்ணிலா நீங்கள்”

அவுஸ்ரேலிய அணியைப் பொறுத்தவரை இந்தப்பண்பு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அவர்களோடு கூடப்பிறந்த இந்தப் பண்பு ஆங்காங்கே ஒவ்வொரு போட்டிகளிலும் தென்பட்டுள்ளது.

யார் எதைக் கூறினாலும் உலகின் அதிசிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான லாராவின் சாதனை - கிரிக்கெட் உலகின் ஒரு மைல்கல் என்பதே உண்மை.

- லெஸ்லி -

கிரிக்கெட் போட்டிகளில் சாதனைகள் முறியடிக்கப்படுகின்ற நிகழ்வுகள் ஒருபுறத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற அதே நேரத்தில், வேதனையைத் தருகின்ற நிகழ்வுகளும் நடந்தேறியுள்ளன. ஒரு அணிக்குச் சாதனையாக இருக்கும் ஒரு விடயம், இன்னொரு அணிக்கு வேதனையாக அமைந்து விடுகின்றது.

# சொந்த நாட்டில் சோகம்

இவ்வாறான நிகழ்வுகள் பல காணப்பட்டாலும் இங்கு நாம் கருத்தில் எடுக்கப் போகின்ற விடயம் - சொந்த நாட்டில் தொடர் ஒன்றினை இழக்கும் சோகமான சம்பவங்களைப் பற்றியதாகும்.

எமது சொந்த நாட்டு அணியான இலங்கையை முதலில் எடுத்துக்கொண்டால், இலங்கை அணி அவுஸ்ரேலியாவுடனான போட்டித் தொடரில் அடைந்த தோல்வியைக் குறிப்பிடலாம்.

இலங்கை அணியை அவுஸ்ரேலியா அணி வென்ற நிகழ்வு, வரலாற்று நிகழ்வாக அமைந்து விடவில்லை என்றாலும், மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் வென்றமையும், ஒருநாள் போட்டித் தொடரைக் கைப்பற்றியமையும் இலங்கை அணிக்கு தனது சொந்தநாட்டில் அடைந்த தோல்வி - தன் மானப் பிரச்சினையாகவே கருதப்படவேண்டியதாக அமைந்தது.

இந்தத் தோல்விக்குப் பொறுப்பேற்று டெஸ்ட் அணியின் தலைவர் பதவியை திலகரட்ணா ராஜினாமாச் செய்துள்ளார். இந்த விடயமும் இங்கு முக்கியமான தொன்றாகும்.

அடுத்து எமது அயல்நாடான இந்தியா - பாகிஸ்தான் அணியை டெஸ்ட் போட்டியில் 2:1 என்ற அடிப்படையிலும், ஒருநாள் தொடரை 3:2 என்ற அடிப்படையிலும் வென்றுள்ளது.

இது ஒரு வரலாற்று நிகழ்வாகவே அமைந்துவிட்டது. சுமார் பதினைந்து ஆண்டு காலத்தின் பின் பாகிஸ்தான் அணியை அதன் சொந்த இடத்தில் வெற்றி கொண்டுள்ளது இந்திய அணி.

இந்தப் போட்டித் தொடரின் தோல்விகள் காரணமாக பாகிஸ்தான் அணிக்குள் சில முரண்பாடுகள் தோன்றியுள்ளன. அணிப் பயிற்சியாளர், அணித்தலைவர், அணிவீரர்கள் எனத் தமது பொறுப்பை உணர்ந்து, ராஜினாமாக் கடிதங்களைச் சமர்ப்பித்தும், ஒருவர்மீது ஒருவர் குற்றஞ் சாட்டியபடியும் உள்ளனர்.

சற்று எட்டிச் சென்றால் அங்கேயும் இதே நிலைமையே காணப்படுகின்றது. இங்கு இதன் தாக்கம் இன்னும் அதிகமாகவே உள்ளது. அதாவது, மேற்கிந்திய தீவுகள் அணி தன் சொந்த இடத்தில் 36 ஆண்டுகளின் பின்னர் டெஸ்ட் தொடர் ஒன்றை இழந்த சோகத்திலுள்ளது.

இங்கு ஒரு குறிப்பிடத்தக்க விடயம் ஒன்று உள்ளது. மேற்கிந்திய அணியின் தலைவர் பிறைன் லாரா - புதியதொரு சாதனையை ஏற்படுத்தி - 'விழுந்தும் மீசையில் மண்படவில்லை' என்பதைக் காட்டியுள்ளார். எனினும், ஒருநாள் போட்டித் தொடர் இடம்பெற்று வருகின்றது. இதில் தனது திறமையைக்காட்டி ஒருநாள் போட்டித் தொடரை வெல்ல வேண்டிய கட்டாயத்தில் மேற்கிந்தியதீவுகள் உள்ளது.



முஷாரப் - "வந்ததற்கு நன்றி பசங்களா"

நியூசிலாந்து தனது சொந்த இடத்தில் ஒருநாள் போட்டித் தொடரை 5:1 என்ற அடிப்படையில் தென்னாபிரிக்க அணியை வெற்றிகொண்டுள்ளது. இந்த வெற்றியைக் கொண்டு டெஸ்ட் போட்டிகளைக் கணிப்பிட்ட விமர்சகர்கள் கருத்து பொய்ப்பிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க அணி டெஸ்ட் போட்டியிலும் தோல்வியடையப் போகின்றது என விமர்சித்தனர் விமர்சகர்கள். நியூசிலாந்து அணியின் ஜம்பம் டெஸ்ட் போட்டிகளில் பலிக்கவில்லை. தென்னாபிரிக்க அணி டெஸ்ட் போட்டித் தொடரைச் சமன் செய்தமையே அதன் வெற்றிக்கு சமனானதாக அமைந்துவிட்டது.

தற்போது மீண்டும் எமது சொந்த நாட்டுக்கே வருவோம். இலங்கை அணி சிம்பாப்வேயுடனான 2 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடி வருகின்றது. இங்கும் இலங்கை அணிக்குக் கைகொடுக்கப்போவது - சொந்த நாட்டில் தொடரை இழக்கும் சோகமாகவே சிம்பாப்வேக்கு அமைந்து விடப்போகின்றது.

சிம்பாப்வேயில் ஆறு வீரர்கள் மட்டுமே அனுபவமுள்ள வீரர்களாகவும், மற்றைய வீரர்கள்புதுமுகங்களாகவும் இருப்பதே இத்தகைய விமர்சனத்துக்கு காரணமாகும். எது எப்படியோ சொந்த நாட்டில் அணியொன்று வெற்றியை இழக்கும்போது அதன் சோகம் அணி வீரர்களை விடவும் அணியின் ரசிகர்களையே அதிகம் கவலைக்குள்ளாக்கின்றது.

- வெண்மதி.

# அவருக்குத் தெரியும் கற்பூர வாசனை



ஸ்ரீவ்வோ
"வாசனை தெரிந்தவர்"

'கிரிக்கெட் ஆட்டத்தின் நன்மைகருதி பந்துவீச்சுமுறைமை சர்ச்சையிலிருந்து இவர் விலக்கப்படவேண்டும். ஏனெனில், அவரது பந்துவீச்சே ஒரு கண்காட்சி'

'இவர் ஒரு தனித்துவம் வாய்ந்த பந்து வீச்சாளர்'-

'இவர் இலங்கைக் கிரிக்கெட் அணியை உயர்போட்டி நிலைக்குக் கொண்டுவந்தார். நிறைய ரசிகர்களை மைதானத்துக்குக் கவர்பவர். நிறையப் பேர் கிரிக்கெட் பற்றிக் கதைக்க வைப்பவர்'.

'இவரைப் போன்றவர்கள்தான் கிரிக்கெட் உலகுக்குத் தேவை'. 'இவரது பந்து வீச்சை எதிர்கொள்வதில் நான் அண்மைக் காலத்தில் நிரம்பச் சிரமப்பட்டிருந்தேன்'.

மேற்கண்ட கருத்துக்கள் முரளி பற்றியவை. இவற்றைக் கூறியிருப்பவர்-அண்மையில் ஓய்வுபெற்ற அவுஸ்ரேலிய அணியின் தலைவர், கிரிக்கெட் ஜாம்பவான் ஸ்ரீவ்வோ.

ஸ்ரீவ்வோ வெறுத்துப்போய் பேசுகிறார். ஏதாவது ஒரு முடிவுக்கு வாருங்கள். உண்டா, இல்லையா. இதோடு இந்தப் பிரச்சினையைவிட்டு விடுங்கள். இந்த மனிதனைத் தொல்லைப்படுத்தாதீர்கள். இனனொன்று, ஆட்களுக்கேற்ப சட்டங்களை நியாயப்படுத்த முனையாதீர்கள். உங்களுக்குத் தேவையானவர்கள் பந்து வீசும் போது, அதில் எந்தப் பிழையும் உங்களுக்குத் தெரிவதில்லை. ஆனால், அதேமுறையில் உங்களுக்கு வேண்டாதவர்கள் பந்துவீசும் போது, குற்றவாளியாகக் காண்கிறீர்கள். 'தொடர்ந்து ஸ்ரீவ்வோ கருத்துக்கூறும்போது -

பந்துவீச்சு முறைக்கான சட்டதிட்டங்களை மீள பரிசீலனை செய்யுங்கள் அல்லது மாற்றுங்கள். ஏனெனில், தற்போதுள்ள இறுக்கமான சட்டவிதிகளின்படி, சரியாக நீங்கள் அவதானிப்பீர்களேயானால், இன்றைய பந்து வீச்சாளர்களில் ஐம்பது சதவீதத்துக்கு மேற்பட்டவர்கள் முறையற்ற பந்து வீச்சாளர்கள் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாவார்கள் என்கிறார்.

முரளியின் மீதான சேறுபூசல் எங்கிருந்து ஆரம்பமாயிற்றோ, அங்கிருந்தே ஆறுதலானதொரு குரல் கேட்பது எவ்வளவோ ஆறுதலாக இருக்கிறது. கிரிக்கெட் ரசிகர்கள் ஒரு தரப்பார் பற்றி பெரிதும் விசனம் கொண்டிருக்கும்வேளையில், அதேமுகாமிலிருந்து ஸ்ரீவ்வோவின் குரல் கேட்பதை, மிகவும் கௌரவத்துடன் நோக்குகிறார்கள். ஸ்ரீவ்வோ என்றும் மதிப்புக் குரியவர்தான்.

-துஷ்யந்தன்-

# மறக்கமுடியுமா

கடந்த வருடம் மே மாதம் வசீம் அக்ரம் - சர்வதேசக் கிரிக்கெட் உலகிலிருந்து ஓய்வுபெற்றார். இன்று இந்திய - பாகிஸ்தான் தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில், வக்கார் யூனுஸ் - கிரிக்கெட் உலகில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.



வக்கார் யூனுஸ்
"நெஞ்சம் மறப்பதில்லை"

இவர் இம்ரான் கானால் சர்வதேசக் கிரிக்கெட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்டவர். வக்கார் தனது குருவின் நம்பிக்கையை வீணாக்கவில்லை. டெஸ்ட் போட்டிகளில் 373 விக்கெட்டுகள், ஒருநாள் போட்டிகளில் 416 விக்கெட்டுகள் என்ற தரவு அவரது தகுதியைக் காட்டிநிற்கும். வக்கார் யூனுஸ் ஓய்வுபெறும் செய்தியை அறிவித்தபின்னர், அவருக்குக் கிடைத்த புகழாரங்கள் அமோகம். அந்த வரிசையில் இம்ரான் கான், சச்சின் டெண்டுல்கர், சௌரவ் கங்கூலி என்றவாறு வரிசை நீண்டுசெல்கிறது.

வக்கார் யூனுஸ் மற்றும் வஸீம் அக்ரம் பற்றிய ஒரு அவதானம் பொருத்தமானது என்று கொள்கின்றோம். ஷேன்வோண் (ஒரு வருடம் தவிர), முரளிதரன், கோட்னிவோல்ஷ் போன்று பாகிஸ்தான் புயல்களாகிய இவர்கள், ஆரம்பம் முதல் ஓய்வுபெறும்வரை தொடர்ச்சியாகச் சர்வதேச ஆட்டங்களில் விளையாடியவர்கள் அல்ல. அதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் களத்துக்குரிய விசேட காரணங்களின் தாக்கம், பொறுப்பு என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். அந்த நிலைமை இருந்திருக்காவிடில், இன்று முரளியும், ஷேன்வோணும் எட்டிப்பிடிக்க முயலும் கோட்னி வோல்ஷின் சாதனையை வசீம் அக்ரம் அல்லது வக்கார் யூனுஷ் எப்போதோ தாண்டியிருப்பார்கள். இன்று இந்த இருவரில் ஒருவரை எட்டிப்பிடிக்கத்தான் வேணும். முரளியும் ஓடிக் கொண்டிருப்பார்.

-துஷ்யந்தன்-

# ஜொனெக்ஸ் விளையாட்டுப் புதிர்

01. மார்டீனா நவ்ரடிலோவா எந்த விளையாட்டுடன் தொடர்பு பட்டவர்?
02. முரளிதரன் வீசும் புதிய முறையிலான சர்ச்சைக்குரிய பந்துவீச்சின் பெயர் என்ன?
03. இலங்கைக் கிரிக்கெட் அணி தற்போது எந்த நாட்டில் கிரிக்கெட் தொடரில் ஈடுபட்டுள்ளது?

விளையாட்டுப் புதிர் - 08

விண்ணப்பப்படிவம்.

முழுப்பெயர்:- ..............................................

முகவரி:- ..............................................

01.

02.

03.



விடைகள் எழுதப்பட்ட இவ் விண்ணப்பப் படிவத்தைப் பின்வரும் முகவரிக்கு, 30.04.2004 முன்னதாக அனுப்புங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.

*விலாசம்:- விளையாட்டுப் புதிர் - இல. 08,*
*நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*

## விளையாட்டுப் புதிர் இல. 07 இன் விடைகள்

1) சுசந்திகா ஜயசிங்க.
2) பிறைன் லாரா.
3) 100 மீற்றர் ஓட்டம்.

**பரிசு பெற்றவர்**
கே. அரசேஸ்வரன்
கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

YMP

அனுசரணை:- ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்
YONEX MULTI PALACE
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.021-2227648, 0777166894.

தெற்குத் திசையினிலே.... கொழும்பிலிருந்து இந்திரஜித்







# அரசுக்குள் வலுத்துவரும் ஆதிக்கப்போராட்டம் நெருக்கடிகளை சமாளிக்கத் திணறும் ஜனாதிபதி

இலங்கையில் இன்று ஏற்பட்டுள்ள அரசியல் நிலையானது எதிர்வரும் காலத்தில் நாட்டின் அரசியல் எவ்வாறு செல்லப்போகிறது என்பதைக் கோடிட்டுக் காட்டியுள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தொடர்ந்தும் இவ்வாறான சவால்களுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்த நிலையை இது எதிர்வுகூறுகின்றது. ஜனாதிபதி - ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பான்மை நாடாளுமன்ற ஆட்சியைக் கலைத்த போது, அதற்காக அவர் பல காரணங்களை முன்வைத்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் அதிகளவான வாய்ப்புக்களை வழங்கிவிட்டது. அதன் காரணமாக நாட்டின் இறைமைக்குப் பங்கம் ஏற்பட்டுள்ளது. இதனைக் களையும் முகமாகத் தாம் யோசனைகளை முன்வைத்தபோதும், ரணில் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. தம்மை ஜனாதிபதி என்ற தகுதியில் ரணில் விக்கிரமசிங்க ஒருபோதும் மதிப்பதில்லை என்ற காரணங்களையே ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

ரணிலின் செயற்பாடுகளினால் திருகோணமலை குரங்குப்பாஞ்சான் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் முகாம் ஒன்றை அமைத்துள்ளனர். இது யுத்தநிறுத்தத்தை மீறும் செயலாகும். எனவே, தமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்தால், இந்த முகாமை அகற்றப்போவதான கருத்து வெளிப்படும் வகையிலேயே ஜனாதிபதி இந்த விடயத்தில் செயற்பட்டார்.

தாம் ஆரம்பித்து வைத்த சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தாமே முன்கொண்டு செல்லவேண்டும் என்ற ஆதங்கமும் ஜனாதிபதியிடம் இருந்தது. இதனைக் கருத்திற்கொண்டே அடிக்கடி அவர் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான முயற்சிகளை விமர்சிக்கும் போதொல்லாம், தாமே அந்த சமாதான முயற்சிகளை ஆரம்பித்து வைத்ததாக நினைவூட்டி வந்தார்.

தமது ஆதங்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் செயற்பட்ட ஜனாதிபதி - தற்சமயம் அதனை நிறைவேற்றிக்கொள்ளும் வகையில் செயற்பட எத்தனிக்கின்றார். எனினும், அவருக்குப் பாரிய தடைகள் முன்நிற்கின்றன. முதலில் அவர் தமது ஆட்சியை நிலைநிறுத்திக்கொள்ள வேண்டிய கட்டாயத்துக்குள்ளாகியுள்ளார். அதுவும் தனித்து அல்லது அரசியலில் இணங்கிச்செல்லமுடியாத மக்கள் விடுதலை முன்னணியினருடன் அவர் வைத்துக்கொண்ட உறவு அவருக்குப் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் வலியுறுத்தலின் அடிப்படையிலேயே ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தை ஜனாதிபதி தமது அதிகாரத்தைக்கொண்டு இம்சித்து வந்தார். ஆனால், இன்று அதே மக்கள் விடுதலை முன்னணியினர் தமது பலத்தைக் கொண்டு ஜனாதிபதியை இம்சித்து வருகின்றனர்.

ஜனாதிபதி தாம் நினைத்த காரியங்களைச் செய்யமுடியாத அளவிற்கு அவர்கள் ஜனாதிபதியை ஆட்டிப்படைக்கின்றனர். மக்கள் விடுதலை முன்னணியைப் பொறுத்தவரையில், அவர்களுக்குத் தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி நிலைத்தாலும், நிலைக்காவிட்டாலும் பாரிய பாதிப்புக்கள் எவையும் ஏற்படப்போவதில்லை.

அவர்கள் தற்போதைய நிலையில் இலங்கையின் தென்பகுதி அரசியலில் இரண்டாம் நிலை தீர்மானிக்கும் கட்சியாக மாறியுள்ளனர். தம்முடன் சேர்ந்து வாக்குக் கேட்டதன் காரணமாகவே சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்தது என்பதை மக்கள் விடுதலை முன்னணியினர் பெருமையாகக் கொள்கின்றனர்.

எனவே, தம்மை ஒதுக்கிவிட்டு, சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குத் தற்போதைய ஆட்சியைக் கொண்டுசெல்லமுடியாது என்பதில் அவர்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. தாம் அமைச்சுக்களைப் பொறுப்பேற்காவிட்டாலும்கூட, ஏற்கனவே மேல்மாகாணசபையில் செயற்பட்டதைப் போன்று நன்நடத்தை அடிப்படையில் சந்திரிகாவின் அரசாங்கத்தை வழிநடத்துவதை மக்கள் விடுதலை முன்னணி விரும்புகிறது.

அமைச்சுப் பதவியின்மூலம் தாம் மேலும் கட்சியின் நடவடிக்கைகளை உயர்த்திக் கொள்ளும் முனைப்புக்களை அது தற்சமயம் மேற்கொண்டு வருகின்றது. மகாவலி அமைச்சுத் தொடர்பிலேயே மக்கள் விடுதலை முன்னணிக்கும், சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையில் முறுகல் உருவானது. இதற்கு முக்கிய காரணம் எதுவென ஆராயும்போது, இதுவரை காலமும் தம்மைப் பயன்படுத்தி, முன்னோக்கி நகர்ந்த மக்கள் விடுதலை முன்னணியை இனி மேலும் வளரவிடுவது - தமது எதிர்காலத்தைக் காட்டிலும், தற்போதைய ஆட்சிக்கே ஆபத்தாக முடிந்துவிடும் என்ற ஜனாதிபதியின் எண்ணமே என்பதை உணரமுடிகிறது.

மகாவலித்துறையை மக்கள் விடுதலை முன்னணி பயன்படுத்தி மேலும் தமது செல்வாக்கைப் பெருப்பித்துக் கொள்ளும் வாய்ப்பு இருப்பதாகும். அதேநேரம் மகாவலித்துறையிலேயே இலங்கையின் பாதுகாப்புத்துறைக்கு அடுத்தபடியாக ஆயுதங்கள் இருக்கும் முக்கிய இடங்கள் காணப்படுகின்றன.

குறிப்பாக மாதுருஓய பிரதேசத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களிடம் பெருமளவு ஆயுதங்கள் இருக்கின்றன. அந்த நிலையில் மகாவலித்துறையை மக்கள் விடுதலை முன்னணியிடம் ஒப்படைத்தால், மக்கள் விடுதலை முன்னணி மீண்டும் ஒரு ஆயுதப் போராட்டத்தை நடத்திக் கொண்டு செல்வதற்கு வாய்ப்பிருப்பதாகவே சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் எண்ணம் கொண்டுள்ளனர். எனவே, மக்கள் விடுதலை முன்னணிக்கு மகாவலித்துறையை வழங்கக்கூடாது என்பதில் இவர்கள் விடாப்பிடியாக இருக்கின்றனர்.

> **“ குறிப்பாக மாதுருஓய பிரதேசத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களிடம் பெருமளவு ஆயுதங்கள் இருக்கின்றன. அந்த நிலையில் மகாவலித்துறையை மக்கள் விடுதலை முன்னணியிடம் ஒப்படைத்தால், மக்கள் விடுதலை முன்னணி மீண்டும் ஒரு ஆயுதப் போராட்டத்தை நடத்திக் கொண்டு செல்வதற்கு வாய்ப்பிருப்பதாகவே சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் எண்ணம் கொண்டுள்ளனர். ”**

இதனை உணர்ந்த மக்கள் விடுதலை முன்னணியினரும், தமது நிலையிலிருந்து சிறிது கீழிறங்கி வந்து, மகாவலி அமைச்சு தமக்குத் தேவையில்லை. அதன் பிரதியமைச்சை எமக்கு வழங்கவேண்டும் என்று கோரியது. ஆனால், அதற்கும் ஜனாதிபதி உரிய பதில் வழங்கவில்லை. சிறிலங்கா சுதந்திரக்கட்சியினருக்கும், மக்கள் விடுதலை முன்னணியினருக்கும் இடையில் இவ்வாறான விட்டுக்கொடுப்பற்ற தன்மை நிலவுவதால், இது எதிர்காலத்தில் மேலும் உக்கிரமடையும் நிலையே தற்சமயம் காணப்படுகின்றது. இது இணங்கிச்செல்லக்கூடிய ஒரு அரசாங்கத்தை முன் நடத்திச்செல்ல உதவிடப்போவதில்லை. அதேநேரம், உடனடியாகச் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற தமிழீழ விடுதலைப் புலிகளினதும், சர்வதேசத்தினதும் அழுத்தங்கள் நிச்சயம் ஐக்கிய மக்கள் சுதந்திர விடுதலை முன்னணியை அழுத்தம் கொள்ளவே செய்யும். அதுவும் மக்கள் விடுதலை முன்னணி இன்னமும் டோக்கியோப் பிரகடனத்தின் அடிப்படையில் செயற்பட இணக்கம் தெரிவிக்கவில்லை.

இந்தநிலையில், ஜனாதிபதிக்குப் பாரிய நெருக்கடிகள் காத்திருக்கின்றன. வெளிநாட்டு உதவியின்றி நாட்டுப் பொருளாதாரத்தை முன்னகர்த்த முடியாத சந்தர்ப்பத்தில் பொருளாதாரம் வீழ்ச்சியை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றது.

இதனைத் தடுக்கவேண்டுமாயின், நிச்சயமாக தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டும் என்ற கட்டத்தில் ஜனாதிபதி இக்கட்டான நிலைக்குள்ளாகியுள்ளார். மறுபுறத்தில் அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவிப்பதாகக் கூறிவந்த ஜாதிக ஹெல உறுமய - தற்சமயம் அரசாங்கத்திற்கு எதிரியாக மாறியுள்ளது. தமது இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் மறைத்து வைத்த குற்றச்சாட்டுத் தொடர்பில் இந்த பகை ஏற்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை ஜனாதிபதி மறுத்தாலும், சபாநாயகர் தெரிவின்போது இந்த இருவரும் அரசாங்கத்திற்குச் சார்பாக வாக்களித்தமை இந்தப் பிரச்சினையைத் தோற்றுவித்துவிட்டுள்ளது. எனவே இலங்கையின் சிறுபான்மை அரசாங்கம் எதிர்காலத்தில் இந்த சவால்களை எதிர்நோக்குவதைத் தடுக்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் தம்மிடம் மன்னிப்புக் கோரும் வரை அதற்குத் தாம் ஆதரவு வழங்கப்போவதில்லை என ஜாதிக ஹெல உறுமய கூறியிருப்பது. இந்தப் பிரச்சினை இப்போதைக்கு நிறைவுபெறாது என்பதையே தெளிவுறுத்துகிறது.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சிநிலையில் காணப்படுகிறது. வெளிநாடுகள் உடனடியாகச் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஆரம்பிக்கக் கோருகின்றனர். ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒக்டோபர் 31 ஆம் திகதி தன்னாட்சி வரைபை சிறிலங்காவின் சிறுபான்மை அரசு ஏற்றுக்கொள்ளாதவரை, சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கும் வாய்ப்புகள் இல்லை. எனவே, ரணில் அரசாங்கம் இருந்த காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் எவற்றுக்குமே முகங்கொடுக்காத ஜனாதிபதி சந்திரிகா- தற்சமயம் முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டிய சிக்கல்நிலைக்கு உள்ளாகியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தன்னாட்சி வரைபை அடிப்படையாகக்கொண்டு பேச்சுக்களை ஆரம்பிக்க முன்வந்தாலும், அதனை ஜே.வி.பி. ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. இந்தநிலையில் ஜனாதிபதியின் அரசாங்கம் மேலும் சிறுபான்மை அரசாங்கமாக மாறுவதற்கு வாய்ப்புள்ளது,

---

நினைவுக் கட்டுரை ரூபன் மரியாம்பிள்ளை

# சிறிய குருமடத்திலே ஆயரின் உதாரண வாழ்வு



தெளிந்த சிந்தனை, நிறைந்த அறிவு, ஆழமான கல்வி, நிமிர்ந்த நடை, எடுப்பான தோற்றம், அன்புள்ளம், கருணை மனம் என்கின்ற பலப்பல ஆயரின் குணாதிசயங்களால் கவரப்பட்டவர்கள் நாங்கள்.

ஓய்வுபெற்று ஆயர் அவர்கள் சிறிய குருமடத்திலே தங்கி இளைப்பாறி வருகின்றார் என்ற செய்தி கேட்டபோதே ஒரு மகிழ்ச்சி, அதறகிடையிலும் ஒரு பயம். ஆயரல்லவா? அததோடு அவ்வளவாகப் பழகிய வாய்ப்புக்கள் சிறிய குருமட மாணவர்கள் எமக்கு பெரிதாக இருந்ததில்லை.

பரபரப்பில்லாது, அமைதியாக சிறிய குருமடம் நுழைந்தார். அன்றைய ஆண்டுகளை மீட்டிப்பார்க்கும்போது இன்றும் ஒரு சந்தோஷம். உண்மையில் அவரது பூரண உருவகத்தால் அதிசயத்தவர்கள் நாங்கள்.

அனைத்துத் துறையிலும் ஆழக்கால்பதித்தவர்கள் மிகவும் சொற்பப்பேரே இருக்கமுடியும். அவர்களில் ஆயரும் ஒருவர். ஆன்மீகம், கல்வி, கலை, நாடகம், விளையாட்டு என்கின்ற பற்பல கோணங்களிலே ஆயரின் திறமைகளை நாங்கள் கண்டு வியந்தோம்.

அவரது ஆன்மீக வாழ்வும், வழிகாட்டலும் வியக்கத்தக்கது. ஆன்மீகமே அடித்தளம் என்கின்ற அவரது உச்சரிப்பு - அவர் ஆன்மீகத்தின் அச்சாணி எனலாம். காலை எழுந்ததும் இறை புகழ்ச்சியில் தன்னை இணைத்து, கல்வாரிப் பலியிலே தன்னை பகிர்ந்து, ஒவ்வொரு நாளையும் தொடங்கி படுக்கைக்கு செல்லும் வரை ஆன்மீகத் தந்தையாக நடமடுவார். கையிலே ஒரு அழகான செபமாலை இருக்கும். அன்னை மரியின் துணையை எமக்காகவும் பரிந்துரைப்பார்.

பிறநேரங்களில் அவரைச் சந்திக்கச் சென்றால், கையில் புத்தகத்துடனேயே அவரைக் காணலாம். வாசிக்கும் பழக்கத்தை ஆயர் அவர்கள் அதிக‘ா கொண்டிருந்தார். “வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்” என்று வாசித்த ஞாபகம. ஆனால், நிதர்சனமாக நாங்கள் நிஜமாகக்கண்டது ஆயர் அவர்களின் வாழ்விலென்றால் அது மிகையில்லை.

மாலைநேரங்களிலே குருமட நேரசூசியின்படி - வேலை, விளையாட்டு. ஆயர் அவர்களின் பிரசன்னம் அங்கும் இருக்கும். குறிப்பாக விளையாட்டு வேளையிலே, மைதானத்திலே நின்று பல நுட்பங்களைச் சொல்லித் தருவார். உதைபந்தாட்டத்திலும், கூடைப்பந்தாட்டத்திலும் கூடியகவனம் கொண்டு உற்சாகப்படுத்துவார்.

ஆங்கில அறிவின் அவசியத்தை அடிக்கடி தெளிவுபடுத்துவார், தானே முன்னின்று வகுப்புக்கள் நடாத்துவார். ஆங்கில வாசிப்பிலும், எழுத்திலும் அதிக அக்கறை கொண்டு கல்வியின் அவசியத்தை நிரம்பச் சொல்லித்தந்தார். இடையிடையே கண்டிப்புடன் பேசினாலும், அவர் கண்டிப்பிலும் நாங்கள் தந்தையின் பரிவையும், தாயின் பாசத்தையும் உணர்ந்து கொண்டது உண்மையே.

அவர் உணவருந்தும் போதுகூட, ஒரு ஒழுக்கம் இருந்தது. சரியான நேரத்திற்கு சாப்பாட்டிற்கு வருவார். ஒரே மாதிரியே அனைத்தையும் செய்வார். குறித்த நேரத்திற்கு சாப்பாட்டை நிறைவு செய்து திரும்புவார். “ஒரு மனிதனின் குணங்களை உணவருந்தும் போது கண்டு கொள்ளலாம்.” என்று எங்கள் சிறிய குருமட அதிபர் அடிக்கடி கூறுவார். ஆயரின் இனிய குணங்களை, ஒழுக்கங்களை அவர் உணவருந்தும் போதுகூட நாங்கள் கண்டுகொண்டோம்.

“அம்மானை” என்றால் அவருக்கு அலாதிப் பிரியம் தன்னுடைய அப்புவையும், ஆச்சியையும் அடிக்கடி நினைவுபடுத்தி சந்திக்கும் அனைவரிடமும் “அம்மாவை” பற்றிக் கதைப்பார். அவர் பாடுகின்ற அம்மானை இன்றும் நெஞ்சத்திரையில் நிழலாடுகின்றது. அவருக்கு அழகான குரல்வளம்.

ஏழைகள், அநாதைகளில் கருணையுள்ளம் கொண்டு தன்னாலான உதவியை அவர்களுக்கு செய்பவர். எதிலும் மனநிறைவுடன் பணியாற்ற வேண்டுமென்ற ஆர்வம் உடையவர்.

யாழ். திருச்சபையின் பாதையிலே இடர்கள், துன்பங்கள், சோதனைகள் நெருங்கிய போது யாழ். திருச்சபையைக் கட்டிக்காத்து வழிநடத்திய பெருமை ஆயரையே சாரும்.

ஈற்றில் எங்கள் சிறிய குருமட வாழ்வு உண்மையாகவே செழிப்பானது காரணம் தாங்கிச்செல்ல, பகிர்ந்துகொள்ள, எங்களை ஏற்றுக்கொள்ள ஒரு மாமனிதரை இறைவன் தந்திருந்தார். சீரிய பந்தயத்தில் ஓடிய அவரது வாழ்வு எமக்கு ஒரு உதாரணம். இவர் இறைவன் கரத்தில் இளைப்பாற இறைஞ்சுகின்றோம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்*
*பெருமையின் பீடுஉடையது இல்.*
திருக்குறள்

# நமது நோக்கு

## நோர்வேக்கான ஜனாதிபதியின் அழைப்பு அரசுக்கு ஏற்பட்ட இரண்டாவது தோல்வி !

புதிய அரசு ஆட்சிப்பொறுப்பேற்று, அதன் முதலாவது கூட்டத் தொடர் நாடாளுமன்றத்தில் புதிய சபாநாயகர் தெரிவுடன் ஆரம்பமான பின்னர் அரசின் எதிர்கால சமாதான முயற்சிகள் தொடர்பான முதலாவது செய்திவெளியாகியுள்ளது.

அதாவது, இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வொன்றை காண்பதற்காக கடந்த ஐ.தே.முன்னணியின் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு, நோர்வே அரசின் ஏற்பாட்டின் பேரில் ஆரம்பித்த விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையானது பல்வேறு சர்ச்சைக்குரியதும், உடன்தீர்வு காணப்படமுடியாதிருந்ததுமான பிரச்சினைகள் காரணமாக இடைநிறுத்தப்பட்டு விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைகளில் விலகிக் கொண்டதையடுத்து ஒரு தேக்க நிலையை எட்டியிருந்தது தெரிந்ததே...

பேச்சுவார்த்தைகள் தொடராதிருந்தபோதிலும் கூட அதனைத் தொடர்வதற்கு வசதியாக விடுதலைப்புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை ஒன்றிற்கான தமது யோசனைகள் அடங்கிய உத்தேச சட்டவரைபினை அரசின் பார்வைக்கு அனுப்பியதுடன், அதனை அரசு பரிசீலித்தபின் அது தொடர்பாக மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்கமுடியும் என்ற சமிக்ஞையை வெளியிட்ட அதேவேளை, தொடர்ந்தும் போர்நிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு உடன்பாட்டை கௌரவித்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான திட்டவரைபினை விடுதலைப்புலிகள் கையளித்த அடுத்துவந்த தினங்களிலேயே ஜனாதிபதி சந்திரிகா தனது நிறைவேற்று அதிகார வலுவைப் பயன்படுத்தி நியாயமற்றதும், அநாகரிகமானதுமான அரசியல் நகர்வொன்றை மேற்கொண்டு ரணில் தலைமையிலான அரசைக் கலைத்ததுடன் புதிய தேர்தலுக்கான நாளையும் அறிவித்து பரபரப்பூட்டினார்.

அத்துடன், சமாதானப் பேச்சுவார்த்தைகளை தொடர்வதற்கான சகல கதவுகளையும் ஜனாதிபதி தேர்தலைக் காரணம் காட்டி மூடிவிட்டார் என்றே கூறவேண்டும்.

அதுமட்டுமல்ல அவர் அதுவரை நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தனக்கிருந்த அவநம்பிக்கையையும், அதிருப்தியையும் வெளிப்படையாகவே கூறி, அரசு - நோர்வே- விடுதலைப்புலிகள் ஆகிய முத்தரப்பினர் மீதும் அபத்தமான குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்து இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது ரணில் - விடுதலைப்புலிகளுக்கு சலுகைகளை அதிகம் வழங்கியமை காரணமாக நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுவிட்டதாகவும், நோர்வே விடுதலைப் புலிகளுக்கு சார்பாக நடப்பதாகவும் விடுதலைப் புலிகள் சமாதானத்தைப் பயன்படுத்தி தமது பலத்தை அதிகரித்துவிட்டதாகவும் குறைகூறினார்.

நாடு அடுத்த தேர்தலை சந்திக்க இருந்த நிலையில் புதிய தேர்தலில் அரசைத் தோற்கடிக்க ஜனாதிபதி உருவாக்கிய முன்னணியில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முற்றாக நிராகரிக்கும் ஜே.வி.பி பிரதான அங்கம் வகித்தமையானது சமாதானம் குறித்து எதிர்கால நம்பிக்கையை முற்றாகவே கேள்விக்குறியாக்கியது.

நோர்வேயின் அநுசரணையாளர் அந்தஸ்து மறுபரிசீலனை செய்யப்படவேண்டும்.

போர்நிறுத்த புரிந்துணர்வு உடன்பாட்டின் ஷரத்துக்கள் மீளாய்வு செய்யப்படவேண்டும்.

புலிகள் தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் எனக் கருதி அவர்களுடன் மட்டும் பேசுவது தவறு.

எதிர்கால பேச்சுக்களில் இந்தியா நேரடியாக ஈடுபடவேண்டும் அல்லது தலையிடவேண்டும்...

எனத் தேர்தல்காலத்தில் சந்திரிகா சார்பில் கதிர்காமரும், ஜே.வி.பியினரும் மேடைமேடையாக முழங்கியபோது சமாதானம் வெகுதொலைவுக்கு விலகிச் சென்று கொண்டேபோயிற்று.

தேர்தலில் சந்திரிகாவின் தலைமையிலான ஐ.ம.சுதந்திர முன்னணிக்கு தென்பகுதி மக்கள் அதிக அளவில் ஆதரவைத் தெரிவித்தபோது சமாதானம் இனிமேல் சாத்தியமற்ற ஒன்றாகவும் உணரப்பட்டது உண்மையே.

பேரினவாத சக்திகளின் ஆதரவின்றி அறுதிப்பெரும்பான்மை பலத்தைப்பெறமுடியாத நிலையில் உள்ள அரசுக்கு சமாதானத்தை தொடராது, ஆட்சியை நடத்த பொருளாதார வலுவும் கிடைக்காது என்ற அரசியல் யதார்த்தமும், சர்வதேச சமூகத்தின் குறிப்பாக அமெரிக்காவின் அறிவுறுத்தலும் சமாதான நகர்வை முன்னெடுக்கவேண்டிய அதுவும் நோர்வேயின் அநுசரணையுடனே முன்னெடுக்கவேண்டிய அழுத்தத்தை ஏற்படுத்தியதில் வியப்பில்லை.

"பேச்சு பல்லக்கு தங்கச்சி கால்நடை" என்ற பழமொழிக்கேற்ப தள்ளாடும் நிலையில் உள்ள சந்திரிகாவின் அரசுக்கு நோர்வேயிடம் சரணாகதி அடைவதைத் தவிர வேறு மார்க்கமுமில்லை. எனவேதான் சமாதான முயற்சிகளுக்கு தொடர்ந்தும் ஏற்பாட்டாளராகச் செயற்பட நோர்வே அரசுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருக்கிறார்.

இது புதிய அரசின் தேர்தல்கால திமிர்த்தனத்திற்கு கிடைத்த இரண்டாவது தோல்வியாகும்.

*ஜனாதிபதியின் நோர்வேக்கான அழைப்பை ஜே.வி.பி யும் ஹெல உறுமயவும் எப்படி வரவேற்கும்?*

அடுத்துவரும் நாட்களில் இதற்கான விடைகள் தெரிந்தேயாகவேண்டும்.

# நாடும் நடப்பும்




# ஆளும் கட்சியினர் அநாகரிகமாக நாடாளுமன்றில் நடந்து கொண்டனர்

## ஹெல உறுமய கண்டனம்

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த சபாநாயகர் தெரிவின் போது ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மிகவும் அநாகரிகமாக நடந்து கொண்டமையை ஜனாதிபதி கவனத்தில் எடுக்கவேண்டுமென ஹெல உறுமய கேட்டுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாடாளுமன்ற சபாநாயகர் போட்டியில் அரசாங்கத் தரப்பு தோற்றதற்கு ஜனாதிபதி சந்திரிகாவே, காரணமாகும்.

இதேவேளை, சபாநாயகர் தெரிவின்போது ஹெல உறுமயவின் வாக்குகள் அனைத்தும் ஆளும்கட்சி வேட்பாளருக்கே என ஹெல உறுமய ஜனாதிபதியிடம் கூறியிருந்தது. இதற்கு காரணம் ஜனாதிபதி முன்னர் கருணா விவகாரத்தில் நடந்து கொண்ட முறையாகும்.

அத்துடன் தமிழீழம் ஒன்று அமையுமாக இருந்தால் அதனைத் தடுப்பதற்கு ஹெல உறுமயவின் உறுப்பினர்கள் சகல நடவடிக்கைகளையும் எடுப்பர். அவ்வாறில்லையெனில் கட்சியின் உறுப்பினர்கள் தமது உயிரையும் தியாகம் செய்ய தயங்கமாட்டார்கள். நாம் எமது ஆதரவு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கே என பல தடவை ஜனாதிபதியிடம் கூறினோம். ஆனால், ஜனாதிபதி தமிழரசுக் கட்சியின் ஆதரவையும் எதிர்பார்த்ததுடன் கருணாவையும் ஏமாற்றினார். இதன்மூலம் ஜனாதிபதி புலிகளின் தலைவர் பிரபாகரனின் கையைப் பலப்படுத்தியுள்ளார் என வண. எல்லாவெல மெத்தானந்த தேரோ தெரிவித்தார்.

அத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, தான் விட்ட பிழைகளைத் திருத்தும் பட்சத்தில் அவர்களுக்கான ஆதரவை தற்போது வழங்கவும் ஹெல உறுமய தயாரென அந்தக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான வண. அத்துரலியே ரத்ன தேரோ தெரிவித்தார்.

# ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் கடந்த வாரம் வீடு திரும்பியுள்ளனர்!

## யுனிசெப் அதிகாரி தகவல்

விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட சிறுவர்கள் கடந்த வாரத்தில் தங்கள் வீடுகளுக்குத் திரும்பியுள்ளதாக யுனிசெப் அமைப்புத் தெரிவித்தது.

இலங்கையில் இரண்டு தசாப்தகால மோதல்களின் வரலாற்றில் இவ்வளவு எண்ணிக்கையான சிறுவர்கள் ஒரே மாதத்தில் வீடு திரும்பியுள்ளமை இதுவே முதற்தடவை என்று யுனிசெப் சுட்டிக்காட்டியுள்ளது.

300 சிறுவர்களை விடுதலைப் புலிகள் யுனிசெப் அமைப்பிடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைத்த அதேவேளை, 750 இற்கு அதிகமான சிறுவர்கள் தமது சொந்த விருப்பின் பேரில் வீடுகளுக்குத் திரும்பியுள்ளதாக யுனிசெப் அமைப்பின் தொடர்பாடல் அதிகாரி ஜெவ்றிக்கின் கூறினார்.

விடுதலைப் புலிகள் இயக்கம் சிறுவர்களை ஒப்படைத்திருப்பது அரசாங்கத்துடனான சமாதான முயற்சிகளில் அவர்களின் விசுவாசத்தை எடுத்துக் காட்டுவதாக யுனிசெவ் தெரிவித்தது.

# தலைமன்னார் பியரில் சுங்க அலுவலகம் திறப்பு

இந்தியாவிலிருந்து மன்னார் ஊடாக கடத்தல்பொருட்கள் வருவதைத் தடுக்கும் முகமாக, கடந்தவாரம் தலைமன்னார் பியரில் சுங்கத் திணைக்கள அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுங்கத் திணைக்களத்தின் உதவிச் சுங்க அதிகாரியாக ஈ.சிவஞானம் நியமிக்கப்பட்டுள்ளார்.

அந்த அலுவலகம் திறக்கப்பட்ட பின்னர், இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக மன்னாருக்கு கொண்டுவரப்பட்ட பெருமளவிலான செய்யது பீடி மற்றும் மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் என்பன, கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், அவற்றின் பெறுமதி சுமார் பத்து லட்சத்துக்கு மேல் என, செய்திகள் *தெரிவித்தன.*

இதேவேளை - தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் மீளத்திரும்பும்போது, சட்டவிரோதமாக, வியாபார ரீதியாக கொண்டுவரப்படும் பொருட்களும் பறிமுதல் செய்யப்படுவதாகவும், தெரிவிக்கப்படுகின்றது. (201)

# தரம் 5 புலமைப் பரிசில்

## வினாத்தாள்கள் அவுட் ஆனதால் 100 மாணவர்களின் பெறுபேறுகள் ரத்து!

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் முறைகேடு இடம்பெற்றதாக கண்டுபிடிக்கப்பட்ட கல்முனையில் உள்ள ஒரு பரீட்சை நிலையத்தைச் சேர்ந்த நூறு மாணவர்களின் பரீட்சை முடிவுகளை ரத்துச்செய்ய பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக பரீட்சைத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தகவல் தருகையில்,

கல்முனையிலுள்ள ஒரு பரீட்சை நிலைய அதிகாரி அந்தப் பகுதியிலுள்ள மாணவர்களுக்கு முன் கூட்டியே வினாத்தாள்களை வழங்கியதாக நடத்தப்பட்ட விசாரணைகளை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இது தொடர்பான அடிப்படை விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. இது தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று கல்முனைப் பகுதிக்கு அனுப்பப்பட்டு விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

பரீட்சை நிலையங்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் மாணவர்களிடம் நடத்தப்பட இருந்த இந்த விசாரணைகள் பொதுத்தேர்தல் நடவடிக்கைகளால் தாமதமடைந்துள்ளன.

மிக விரைவில் அப்பகுதிக்குச் செல்லவுள்ள அதிகாரிகள் குழுவினர் பூரண விசாரணைகளை நடத்தி - மாணவர்களுக்கு அநீதி ஏற்படாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்வர் எனும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# ஜாதிக ஹெல உறுமயவில்

## நாடாளுமன்ற குழுத்தலைவர் தெரிவு கட்சிக்குள் புதிய நெருக்கடி நிலை!

(கொழும்பு)

ஜாதிகஹெல உறுமயவின் நாடாளுமன்ற குழுத்தலைவராகத் தெரிவு செய்வது தொடர்பான விவகாரத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றியிருப்பதால் அக்கட்சிக்குள் புதிய நெருக்கடி உருவாகியுள்ளது.

ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒரு குழுவினர் - இந்தப் பதவிக்கு ' சுப்ரீம் சங்க மண்டலய' என்ற தமது உயர் பீடத்தின் தலைவரான வண. எல்லாவெல மெத்தானந்த தேரருக்கு வழங்கப்படவேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்

ஆனால்,. சிஹல உறுமய குழுவினர், .வண. அத்துரலியே ரத்தின தேரருக்கு வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

இதேவேளை, நாட்டு மக்களிடம் நன்கு அறியப்பட்ட தன்னையே இப்பதவிக்கு நியமிக்க வேண்டும் என உடுவே தம்மலோக தேரோ தெரிவித்திருக்கிறார்.

நாடாளுமன்றக் குழுத்தலைவர், நாடாளுமன்றக்குழுத் *தலைவர்களின் கூட்டத்தில் பங்கேற்பதுடன், விசேட அறி*விப்புக்களின் போது முக்கிய இடம் வழங்கப்படும்.

இந்நிலையில், ஹெல உறுமய பிக்குகள் மத்தியில் தோன்றியுள்ள பூசல்கள் மேலும் விரிவடையலாம் எனக் கருதப்படுகிறது.

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தர)ப் பரீட்சை

## அளவையியலும் விஞ்ஞானமும் - பகுதி I ஆசிரியர் K.T.மோகன் மாதிரி வினாத்தாள்

24.




படத்தில் காட்டியுள்ளபடி ஆப்பானது ஒப்பமான சாய்தளத்தின் வழியே m திணிவுடைய குற்றியொன்று உச்சியில் இருந்து அதன் அடி வரை வழக்குகின்றது. ஆப்பானது ஒப்பமான கிடைத்தளத்தில் உள்ளது.

பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A) ஆப்பு நிலைப்படுத்தப்பட்டிருப்பின் துணிக்கையின் ஆர்முடுகல் சாய்தளம் வழியே g sinα ஆகும்.
B) ஆப்பு கிடைத்தளத்தில் இயங்க சுயாதீனமுள்ள போது ஆப்பின் அடியை அடை கையில் உள்ள குற்றியின் கதி ஆப்பு நிலைப் படுத்தப்பட்டுள்ள போதுள்ள குற்றியின் கதியிலும் உயர்வானது.
C) ஆப்பு கிடைத்தளத்தில் இயங்க சுயாதீனமுள்ள போது ஆப்பின் அடியை அடைகையில் உள்ள குற்றியின் கதி, ஆப்பு நிலைப் படுத்தப்பட்டுள்ள போதுள்ள குற்றியின் கதிக்கு சமனானது

இவற்றுள் சரியானது.

1) A மட்டும் 2) B மட்டும் 3) C மட்டும்
4) A, B மட்டும் 5) A, C மட்டும்

25.




தரப்பட்டுள்ள சுற்றில் சந்தி X இன் உள்ள மின்னழுத்தம்

1) 4/3 V 2) ¾ V 3) 0 V 4) 8/5 V 5) 2 V

26. இரு ஏற்றங்கள் வெற்றிடத்தில் ஒரு குறித்த இடைத்தூரத்தில் உள்ளன. இப்போது அவ்விரு ஏற்றங்களும் அதே இடைத்தூரத் தில் K சார்பு அனுமதித் திறனுடைய ஒரு ஊடகத்தில் வைக்கப் படுகின்றன. இரு சந்தர்ப்பங்களிலும் அவற்றில் தாக்கும் விசை களுக்கிடையிலான விகிதம்

1) 1: K 2) K: 2 3) $K^2$:1 4) 1: $K^2$ 5) 1: 1

27.




நிலை A நிலை B

ஒரு முடிய உலோகத்தடம் ஒன்றிற்கு மேல் ஒரு சிறிய சட்டக் காந்தம் விழவிடப்படுகின்றது. பின்னர் அது மூடாத உலோகத் தடம் ஒன்றினூடு தடம் ஒன்றினூடு விழவிடப்படுகின்றது. காந்தத்தின் ஆர்முடுகல் (a) சரியாக வகைக்குறிப்பது

| நிலை A | நிலை B |
|---|---|
| a = g | a = g |
| a > g | a < g |
| a < g | a > g |
| a > g | a = g |
| a < g | a = g |

28. ஆடலோட்டப் பிறப்பாக்கி ஒன்றில் சுருளினது முறுக்குகளின் எண்ணிக்கை இரட்டிக்கப்படும் போது பெறப்படும் அழுத்த வேறுபாட்டின்

A) உச்சப் பெறுமானம் இரட்டிப்பாகும்
B) மீடிறன் அதிகரிக்கும்
C) இடைவர்க்க மூல பெறுமதி இரட்டிக்கும்.

இவற்றுள் சரியானவை

1) A மட்டும் 2) B மட்டும் 3) A, B மட்டும்
4) B, C மட்டும் 5) A, B, C எல்லாம்

29.



ஒவ்வொன்றும் A பரப்புடைய நான்கு உலோகத் தட்டுக்கள்.படத்தில் காட்டப்பட் டுள்ள போல் d தூரத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவ்வொழுங்கின் கொள்ளளவு?

1) $\frac{\varepsilon_0 A}{d}$ 2) $\frac{2\varepsilon_0 A}{d}$ 3) $\frac{3\varepsilon_0 A}{d}$ 4) $\frac{4\varepsilon_0 A}{d}$ 5) 0

30. வெள்ளீயம் ஒரு மீ கடத்தியாகும். (Supper conductor) என் அவதி வெப்பநிலை 7.2K ஆகும். அதன் தடை வெப்பநிலையுடன் மாறுபடுவதை திறம்படக் காட்டுவது.Σ




31. மின்கலம் ஒன்றின் மின்இயக்க விசையானது பெரும்பாலும் தங்கியிருப்பது

1) மின்வாய்களின் பரப்பளவில்
2) மின்வாய்களுக்கு இடைப்பட்ட தூரம்
3) மின்பகு பொருட்களினதும் மின்வாய்களினதும் இரசாயனத்தன்மையில்
4) மின்பகுபொருளின் தற்தடையில்
5) மின்பகு பொருளின் கனவளவில்.

32. ஆளியிடப்பட்ட கணத்திலிருந்து தங்குதன் இழை விளக்கு ஒன்றினூடாக மின்னோட்டம் (I) நேரம் (t) யுடன் மாறுபடுவதைக் காட்டும் வரைபு.




33. மீற்றர் பாலப்பரிசோதனையில் சமனிலைப்புள்ளியானது பின்வருவனவற்றில் எதில் தங்கியிராது?

A) கலத்தின் உட்தடை B) வழக்கிக் கம்பியின் தடை
C) கல்வனோமானியின் தடை இவற்றுள் சரியானவை

1) A மட்டம் 2) B மட்டும் 3) C மட்டும்
4) A, B மட்டும் 5) A, B. C மட்டும்

34. மி.இ.வி E யையும், உட்தடை r உம் உடைய மின்கலமானது மாறும் தடை R இற்கு இணைக்கப்பட்டுள்ளது. தடை R ஆனது மாற்றப்படும் போது புள்ளிகள் P, Q இற்கு குறுக்கேயான அழுத்த வேறுபாடு Vஆனது மின்னோட்டம் Iயுடன் பின்வரு மாறு தொடர்படுத்தப்படுகிறது. V= IR, V =E–Ir. இவை வரைபு ஒன்றினால் குறிக்கப் படும் போது, கலத்தின் மின்இயக்க விசை E I நேரடியாகப் பெறுவதற்கு உதவும் புள்ளி




1.P 2. Q 3. R 4. S 5.T

35. படத்தில் காட்டப்பட்டுள்ள சுற்றில் வெளித்தடையில் பிறப்பிக்கப்படும் வலுஉயர்வாக இருக்கும் போது சுற்றின் திறன்.




1) 50% 2) 75% 3) 25%
4) 10 5) 100%

36. உருக்கு கோளம் ஒன்று கிளிசரீன் நிரல் ஒன்றினூடு விழவிடப் படுகின்றது. உருக்குக் கோளத்தின் இயக்கத்தில் (E) ஆனது நேரம்(t)யுடன் மாறுபடுவதைக் திறம்படக் குறிப்பது.




37 a ஆரையுள்ள மயிர்த்துளைக்குளாய் ஒன்றின் எடுக்கப் படித்திறன் $\frac{P_1-P_2}{l}$ ஆகவுள்ள போது பிசுக்குணமைக் குணகம் η ஆகவுள்ள திரவம் பாயும்போது திரவத்தின் அதியுயர் வேகம் U எனின்.

1) $U=a\frac{(P_1-P_2)}{8nl}$ 2) $U=a\frac{al\lambda}{4(P_1-P_2)}$ 3) $U=a\frac{al}{4(P_1-P_2)\lambda}$

4) $U=a\frac{al^2}{4n}$ 5) $U=a\frac{(P_1-P_2)}{4nl}$

38. ஒரு மெல்லிய இறப்பர் துண்டின் நீளம் $l$ ஆகும். அதன் நுனியில் இருந்து பொருளொன்றைத் தொங்கவிடும் போது நீட்டி $e_1$ ஆகும். அப்பொருள் நீரில் முற்றாக அமிழுமாறு பிடிக்கப்படும்போது நீட்சி $e_2$ ஆகும். பின்னர் அப்பொருள் தேங்காய் எண்ணெயில் முழுவதுமாக அமிழ்த்தப்படும் போது நீட்சி $e_3$ ஆகும். தேங்காய் எண்ணெயின் சாரடர்த்தி.

1) $\frac{e_3}{e_1}$ 2) $\frac{e_2}{e_3}$ 3) $\frac{e_3-e_1}{e_2-e_1}$ 4) $\frac{e_3-e_1}{l}$ 5) $\frac{e_1-e_3}{e_1-e_2}$

(தொடரும்)

கருணாநிதி B.sc
ஆசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரி

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# பாக்தாத்திலுள்ள அமெரிக்க தளங்கள் மீது றொக்கட் தாக்குதல்; 5 படையினர் பலி!

(பக்தாத்)

ஈராக்கின், பாக்தாத் நகரின் வட பகுதியில் அமைந்துள்ள அமெரிக்கப் படையினரின் முகாம்கள் மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட றொக்கட் தாக்குதலில் 5 அமெரிக்கப் படையினா் கொல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு ஏவப்பட்ட றொக்கட்டில் ஒன்று ஈராக் தலைநகரிலுள்ள சந்தையொன்றில் விழுந்து வெடித்ததில் மூன்று ஈராக்கிய பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

இவைதவிர மேலும் பல தாக்குதல்கள் நேற்று நடைபெற்றதாகவும், இதில் மேலும் 12 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலை மேற்கொணடவர்களுக்கெதிராக அமெரிக்கப் படையினா் ஈராக்கின் சதாா் பகுதியில் தாக்குதலை மேற்கொண்டபோது குறைந்தது இரு ஈராக்கியர்கள் கொல்லப்பட்டதாகத் தெரியவருகிறது. அத்துடன் இந்தச் சம்பவத்தின்போது தமது வீட்டில் நித்திரையிலிருந்த மூன்று ஈராக்கியப் பெண்களும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தால் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நடந்து ஒரு மணித்தியாலத்தின் பின்னா் ஈராக்கிலுள்ள மற்றொரு சந்தைமீது நடத்தப்பட்ட றொக்கட் தாக்குதலில் 3 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டதோடு டசினுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

# இந்தோனேஷியாவில் மண்சரிவு முப்பத்தேழு பொதுமக்கள் பலி!

இந்தோனேஷியாவின் சுமாத்ராவில் நேற்று முன்தினம் கடும் மழை காரணமாக மண்சரிவு ஏற்பட்டு ஒரு பஸ் கவிழ்ந்ததில், 37 பேர் இறந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மீட்புப் பணியாளர்கள் - உபகரணங்கள் சகிதம் மண்ணில் புதையுண்டவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளனரெனவும், இன்னும் ஆறு பேர் புதைந்தநிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மண்சரிவினால் மேலும் 14 பேர் காயமடைந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

மேற்கு, வடக்கு சுமாத்ரா மாகாணத்தில் சென்றுகொண்டிருந்த பேரூந்து மேற்படி மண்சரிவினால் தாக்கப்பட்டது. மலை வீதியில் ஏற்பட்ட இந்த மண்சரிவினால் அந்தப் பேரூந்து முழுமையாக மண்ணில் புதையுண்டது.

இந்தோனேஷிய பொலிஸ் அதிகாரியொருவர் உள்ளூர் வானொலிக்கு தெரிவிக்கையில், மண்சரிவினால் இதுவரை 37 பேர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

காடழிப்பும், நீண்ட மழை காலமுமே இந்தோனேஷியாவில் வருடாவரு .ம் இடம்பெறும் மண்சரிவுக்குக் காரணமெனத் தெரியவருகிறது.

## லிபியா மீது விதிக்கப்பட்ட

# பொருளாதாரத் தடையை நீக்க அமெரிக்க அரசு தீர்மானம்!



லிபியா மீதான பொருளாதாரத் தடைகளை நீக்குவதற்கு அமெரிகா தீர்மானித்துள்ளது. இத் தீர்மானத்தை லிபியா வரவேற்றுள்ளது. அத்துடன், அமெரிக்கா மீதான உறவுகளை வலுபபடுத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. வொஷிங்ரனுடன் முழுமையான இராஜதந்திர உறவுகளை மீண்டும் ஏற்படுத்திக்கொள்வதில் லிபிய அதிகாரிகள் நம்பிக்கை கொண்டுளளதாக பி.பி.ஸியின் 'ரனா ஜவாட்' தெரிவித்துள்ளார்.

பொருளாதாரத் தடை நீக்கத்தின் மூலம் அமெரிக்க எண்ணைக் கம்பனிகளும், வங்கிகளும் லிபியாவில் மூலதனமிடுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதுவரை பயங்கரவாதத்திற்கு ஊககமளித்த நாடுகளின் பட்டியலில் லிபியாவும் சேர்க்கப்பட்டிருந்தது. தற்போது அந்தப் பட்டியலில் இருந்து லிபியாவின் பெயரை நீக்கிவிடுவதற்கான முயற்சிகளை அமெரிக்கா மேற்கொண்டுவருகின்றது.

லிபியா தொழில்நுட்பம், விமானப் பயணம், எண்ணை வளம் ஆகியவற்றை அமெரிக்காவின் உதவியுடன் விருத்திசெய்ய முடியும். இதே வேளை, லிபியாவின் எண்ணை வளத்தை தனது தேவைகளுக்கு அமெரிக்கா உபயோகித்துக்கொளள முடியும். 18 ஆண்டுகளுக்கு முன்னர் லிபியாவில் செயறபட்ட நான்கு அமெரிக்க எணணைக் கம்பனிகளை மீண்டும் செயற்படுத்துவதற்கு அமெரிக்கா நேற்றுமுன்தினம் மேற்கொண்ட தீர்மானம் வழிவகுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவுடனான அரசியல் பொருளாதார உறவுகள் லிபியாவில் வேலை வாய்ப்பினை அதிகரிக்கும் என மக்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளதாக பி.பி.ஸியின் செய்தியாளர் தொிவித்துள்ளார்.

# பஸ்ரா தாக்குதலுடன் தொடர்பான 5 சந்தேக நபர்கள் ஈராக்கில் கைது!

ஈராக்கின் பஸ்ரா நகரில் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் 5 ஈராக்கிய சந்தேக நபர்களை அந்த நாட்டுப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

வீதியால் பயணித்துக்கொண்டிருந்த லொறியை சந்தேகத்தின் பேரில் வழிமறித்து ஈராக்கிய பொலிஸார் சோதனை மேற்கொண்ட பொழுது அதற்குள் வெடிபொருட்கள் இருந்ததாகவும், இதனால் லொறியில் இருந்த இருவரும் கைதுசெய்யப்பட்டதாகவும் - ஈராக்கிய பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மற்றைய சம்பவம் ஒன்றில் வீடு ஒன்றினை பொலிஸார் சோதனை இட்டபோது, 20 தொன் வெடிபொருட்களுடன் ஏவுகணைகளும் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், இதில் மூவர் கைது செய்யப்பட்டனா் எனவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, ஈராக்கிய புனித நகரான நஜாப் மீது அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் தாக்குதலை நடாத்தினால், அவர்கள் மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தப்படும் என ஈராக்கின் ஆன்மீகத் தலைவரான மொக்ரடா சதாா் நேற்றுமுன்தினம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், அமெரிக்கப் படையினருக்கு எதிராக தற்கொலைத் தாக்குதலை முன்னெடுக்கவுள்ளதாகவும், அனைவரும் மனித வெடிகுணடுகளாக செயற்படப் போவதாகவும் தெரிவித்தார். ஆனாலும் ஆன்மீகத் தலைவரான சதாரை தாம் கொன்றோ அல்லது காயம் அடைய வைத்தோ படிக்கவுள்ளதாக அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் தெரிவித்தன.

சதாம் ஹுசைனால் முன்னா் படைகளில் இருந்து வெளியேற்றப்பட்டவர்களில் இருந்து ஆட்களைத் திரட்டி ஈராக்கிற்கான புதிய இராணுவப் படைப் பிரிவொன்றை உருவாக்கவுள்ளதாக ஈராக்கிற்கான அமெரிக்க நிர்வாக அதிகாரி போல் பிரீமர் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.



இதேவேளை, ஆன்மீகத் தலைவர் சதாரின் ஆதரவாளர்கள் நேற்றுமுன்தினம் ஈராக்கின் கா்பாலா பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அமெரிக்கக் கூட்டுப் படைகள் மீது நடத்திய தாக்குதலில் பல்கேரிய நாட்டுப் படை வீரர் ஒருவர் படுகாயமடைந்தார்.

# யசீர் அரபாத்திற்கு தீங்கெதனையும் இஸ்ரேல் மேற்கொள்ளக்கூடாது!

## அமெரிக்க அதிபர் புஷ் கோரிக்கை



பலஸ்தீன தலைவர் யசீர் அரபாத்திற்கு எதுவித தீங்கும் விளைவிக்கக்கூடாதெனறு இஸ்ரேல் பிரதமர் உறுதியளிக்கவேண்டுமென அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச் புஷ் கேட்டுக் கொண்டுள்ளார்.

மூன்று ஆண்டுகளுக்குமுன் அதிபர் புஷ்ஷைச் சந்தித்த வேளையில் யசீர் அரபாத்துக்கு தீங்கு விளைவிக்கப் போவதில்லையென உறுதிமொழி அளித்திருந்ததாகவும், ஆனால் தற்போது அந்த உறுதிமொழிக்கு கட்டுப்படப் போவதில்லை எனவும் ஏரியல் ஷரோன் இஸ்ரேலிய வானொலிக்குத் தெரிவித்துள்ளார்.

ஆனால், இவ்வாறான அச்சுறுத்தலுக்கு தான் பயப்படப்போவதில்லையென அரபாத் தெரிவித்தார். பலஸ்தீன தீவிரவாதிகளுக்கு அரபாத் ஆதரவு அளித்து வருவதாக இஸ்ரேல் கண்டித்துள்ளது. அத்துடன் அமெரிக்க அதிபர் புஷ்ஷின் நிர்வாகத்தில் கடமையாற்றும் அதிகாரி ஒருவர், தலைவர் யசீர் அரபாத்திற்கு எதிரான ஏரியல் ஷரோனின் திட்டங்களைக் கண்டித்துள்ளார்.

மேற்குக் கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள குடியிருப்புக்களை விலக்கிக்கொள்வதற்கான பேச்சுக்களைத் தனது கட்சி அங்கத்தவர்களிடையே ஷரோன் மேற்கொண்டிருந்தார். இந்தப் பேச்சுக்கள் நடைபெறுவதற்கு ஒருவாரத்திற்கு முன்னர் யசீர் அரபாத்திற்கு எதிரான தனது திட்டங்களை அவர் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் யூத குடியிருப்புக்களை விலக்கும் திட்டத்திற்கு சரித்திர முக்கியத்துவம் கொண்ட துணிசசலான செயல் என அதிபர் புஷ் தெரிவித்திருந்தார். ஆனால், இஸ்ரேலிய அரசு தொடர்ந்து இரு பலஸ்தீன தலைவர்களைக் கொலை செய்துள்ளது. இந்தச் செயல்களை அமெரிக்க அரசு கண்டிக்கவில்லை. இதனால், அரேபியத் தலைவர்கள் மத்தியில் அமெரிக்கா மீது அதிக வெறுப்புணர்வு தோன்றியிருந்தது. இதனால், யசீர் அரபாத் மீது தாக்குதல் ஒன்று நிகழ்த்தப்படும்போது, விளைவுகள் மோசமாகுமென அமெரிக்கா உணர்ந்துள்ளதாக பி.பி.ஸியின் செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

## அமெரிக்கப் படையில் இணைந்து செயற்பட்ட

# முன்னாள் உதைபந்தாட்ட வீரர் ஆப்கானில் சுட்டுக்கொலை!




அமெரிக்காவின் முன்னாள் உதைபந்தாட்ட வீரரும், தற்போது அமெரிக்க இராணுவத்தில் தன்னை இணைத்து பணிபுரிந்தவருமான பாற் தில்மான் என்பவர் தென்கிழக்கு ஆப்கானிஸ்தானில் கடந்த வியாழக் கிழமை கொல்லப்பட்டார்.

பாற் தில்மான் 6.3 மில்லியன் அமெரிக்க டொலர் பெற்று அரிசோனா கார்டினல் என்ற உதைபந்தாட்ட குழுவில் விளையாடினார்.

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதி உலக வர்த்தக நிலையம் தாக்கப்பட்ட பின் அவர் அமெரிக்க இராணுவத்துடன் தம்மை வருடமொன்றிற்கு 18,000 அமெரிக்க டொலர் சம்பளத்தில் இணைத்துக் கொண்டிருந்தார்.

அமெரிக்கப்படைகள் தென் காபூலில் ஒஸாமா பின்லேடனை தேடி வலைவிரித்துள்ளவேளையிலேயே இவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

27 வயது கொண்ட உதைபந்தாட்டவீர் தனது தேன்நிலவை தமது மனைவி மேரியுடன் கழித்த பின்பு இராணுவத்துடன் தம்மை இணைதததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வெள்ளை மாளிகை இவரின் செயற்திறனுக்கு பெரும்மதிப்பளித்துள்ளது. அவர் உதைபந்தாட்டத்தில் மாத்திரமல்ல இராணுவத்திலும் பிரபல்யமானவர் எனவும் அறிக்கை விடப்பட்டுள்ளது. இவரின் மறைவுக்கு அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷும் அவரது குடும்பமும் தங்களின் அனுதாபத்தை தெரிவிப்பதாக வெள்ளை மாளிகைப் பேச்சாளர் தெரிவித்தார்.

# ரயில் விபத்து நடந்ததை வடகொரியா உறுதிப்படுத்தியது

தனது நாட்டில் நடைபெற்ற ரயில் விபத்து விபரங்களை மறைத்து வந்த வடகொராயா தற்போது இதனை மோசமான விபத்தெனத் தெரிவித்துள்ளது. இந்த விபத்தில் நூற்றுக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவித்த போதிலும் வடகொரியாவின் செய்தி அமைப்புக்கள் சரியான எண்ணிக்கையை இதுவரை அறிவிக்கவில்லை.

ரயில் வண்டியில் மின் கம்பிகளின் பொறியினாலேயே இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாக வடகொரய அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரயில் விபத்து நடைபெற்றுள்ளது என்பதை வடகொரியா தெரிவித்த பின்னரே உலக நாடுகள் அது உதவிகோரியுள்ளது. சீனா தென்கொரியா ஆகிய நாடுகளில் இதுவரை 1 மில்லியன் டொலர்களை நிவாரணப்பணிகளுக்கு வழங்கியுள்ளன.வடகொரியா உதவி கோரினால் உதவி வழங்குவதற்கு அமெரிக்காவும் தயாராகவுள்ளதாக அந்த நாடு தெரிவித்துள்ளது.

# சைப்பிரஸை இணைப்பதற்கான வாக்கெடுப்பு நேற்று நடைபெற்றது

இரண்டு நாடுகளின் ஆதிக்கத்தின்கீழ் இரண்டாகச் செயற்படும் சைப்பிரஸை ஒரேநாடாகச் சேர்ப்பதற்கான வாக்களிப்பு நேற்று நடைபெற்றது.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முன் துருக்கிப் படையினரால் சைப்பிரஸ் ஆக்கிரமிக்கப்பட்டது. இதன் பின் அந்த நாட்டின் ஒரு பகுதியைத் துருக்கியும், மறு பகுதியை கிரீக்கும் இன்றுவரை ஆட்சிசெய்து வருகின்றன.

இவ்வாறு இரண்டாகப் பிரிந்துள்ள சைப்பிரஸை ஒன்றாக இணைக்கவே இந்தக் கருத்துக் கணிப்பு வாக்களிப்பு இரு பகுதி மக்களாலும் நடத்தப்பட்டது.

இந்த இரு சைப்பிரஸும் ஒன்றாக இணைவதற்கான திட்டத்தை ஐ.நா.சபை முன்வைத்திருந்தது.

ஐ.நா.வின் இந்தத் திட்டத்திற்கு துருக்கியின் கீழுள்ள சைப்பிரஸ் மக்கள் தமது ஆதரவைத் தெரிவித்த அதேவேளை கிரேக்கர்களின் ஆட்சிககுட்பட்ட மக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இரண்டு பகுதி மக்களும் சம்மதித்தால் மட்டுமே சைப்பிரஸ் ஒன்றிணைவதை செயற்படுத்தமுடியுமென வும் கருத்துக் கணிப்புத் தோல்வியடைந்தால ஐரோப்பிய யூனியனின் சட்ட திட்டங்கள் கிரீக் பகுதி சைப்பிரஸ் மக்களுக்கே பொருந்துமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை,

கிரீக் பகுதி மக்கள் கருத்துக் கணிப்பிற்கு எதிராக வாக்களித்தால் துருக்கி பகுதியில் அமைந்துள்ள சைப்பிரஸ் பிரிந்துள்ள பகுதி என்ற கருத்து நீக்கப்படுமென அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் தெரிவித்துள்ளன.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சபை முதல்வர் பதவி யாருக்கு? மீண்டும் நாடாளுமன்றில் சிக்கல்!

இலங்கையின் நாடாளுமன்றத்தில் மீண்டும் ஒரு பதவிச் சிக்கல் நிலை ஏற்படும் வாய்ப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற சபாநாயகர் பதவி எதிர்க்கட்சிக்கு சென்றுள்ள நிலையில் சபைமுதல்வர் பதவியும் எதிர்க்கட்சிக்கு செல்லக்கூடிய வாய்ப்பு ஒன்று குறித்து அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

இலங்கையின் வரலாற்றில் இது வரை எதிர்கட்சி உறுப்பினர் ஒருவர் சபை முதல்வராக பதவியேற்றதில்லை. சபை முதல்வர் ஒருவரே நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகள் குறித்துத் திட்டங்களை வகுக்கும் பொறுப்பைக் கொண்டிருக்கிறார்.

தற்போதைய நிலையில் ஆளும் [illegible]பான்மை அரசாங்கத்தின் சார்பில் சபை முதல்வர் ஒருவர் தெரிவு செய்யப்படுவராக இருந்தால் அவரின் திட்டங்கள் பெரும்பான்மை எதிர்க்கட்சிகள் ஏற்றுக் கொள்ளாதபோது நாடாளுமன்றத்தில் மீண்டும் சிக்கல் ஏற்பட வாய்பு உண்டு. எனவே இது வரை காலமும் நடைமுறையில் இல்லாத வகையில் எதிர்க்கட்சியின் சார்பில் சபைமுதல்வர் ஒருவர் நாடாளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்படுவதற்கான தீர்க்கமான நடவடிக்கைகளை எதிர்க்கட்சிகள் மேற்கொண்டுள்ளதாகவே தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, ஆளும் கட்சியின் சார்பில் சபைமுதல்வராக அமைச்சர் அநுர பண்டாரநாயக்கவின் பெயர் பிரேரிக்கப்பட்டுள்ளது. எதிர்கட்சிகளைப் பொறுத்தவரையில் ஐக்கிய தேசிய முன்னணியின் கூட்டணிக் கட்சி ஒன்றின் தலைவரை நியமிப்பது குறித்து ஆராயப்பட்டுள்ளது. தற்போதைய நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கு 108 ஆசனங்கள் இருக்கின்ற அதேநேரம், எதிர்க்கட்சிகள் 117 ஆசனங்களை கொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (01)

## இலவச சிகிச்சை வழங்க

# யாழ்ப்பாணம் வந்துள்ள அமெரிக்க மருத்துவர்கள்!

யாழ்ப்பாண மக்களுக்கான இலவச மருத்துவ சிகிச்சை முகாம் ஒன்றை நடத்துவதற்கான முன்னேற்பாடுகளைக் கவனிப்பதற்காக, அமெரிக்க இராணுவ மருத்துவ அதிகாரிகள் குழு ஒன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்தது.

யாழ். போதனா வைத்தியசாலையில் அமெரிக்க இராணுவ மருத்துவ அதிகாரிகள் குழு ஒன்று இலவச மருத்துவ சிகிச்சை முகாம் ஒன்றை நடத்தவுள்ளது.

இதற்கான முன்னேற்பாடுகளை கவனிப்பதற்காகவும், இலவச மருத்துவச் சிகிச்சைகாக யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்து சிபார்சு செயயப்பட்ட நோயாளர் களில் தம்மால் சிகிச்சை அளிக்கக்கூடிய நோயாளர்களைத் தெரிவு செய்வதற்கு மட்டுமே இவர்கள் வந்துள்ளனர்.

முதற்கட்டமாக யாழ்ப்பாணம் வந்த மருத்துவர் குழுவில் கேற் ஹரிசன், லூயிஸ் மெக்கியூவா, டொனமூர், ஆன் சமாட்டினோ, ஹியூபேர்ட் முசெல், பிளப்வூட்வேர்த் ஆகிய ஆறு மருத்துவ நிபுணர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இவர்கள் நாளை முதல் தமது மருத்துவ சிகிச்சைப் பணிகளை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மகாவலி அமைச்சுவிவகாரம்

# சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி; இன்று முக்கியமான பேச்சு!

(கொழும்பு)

மகாவலி அபிவிருத்தி அமைச்சு தொடர்பாக ஜே.வி.பிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையில் முக்கியமான பேச்சுவார்த்தை ஒன்று இன்று இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் இந்தப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே மகாவலி அபிவிருத்தி அமைச்சு தொடர்பில் எழுந்துள்ள முறுகல் காரணமாக ஜே.வி.பி தமது ஏனைய நான்கு அமைச்சுப் பதவிகளையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

இதேவேளை, இன்று நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையின் அடிப்படையில் ஜே.வி.பி தமது அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முதலில் மகாவலி அபிவிருத்தி அமைச்சை தமது பொறுப்பின் கீழ் தருமாறு கோரிய ஜே.வி.பி தற்சமயம் விட்டுக்கொடுப்புக்கு உடன்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் கீழ் மகாவலி அபிவிருத்தி அமைச்சு இருக்குமானால் அதன் பிரதி அமைச்சை தாம் ஏற்றுக்கொள்ளத் தயார் என்பதே ஜே.வி.பியின் தற்போதைய நிலைப்பாடாகும் என்று குறிப்பிடப்பட்டது. ஆனால், ஜனாதிபதி சந்திரிகா இதனை நிராகரித்துள்ளார்.

## கிங்ஸ்லியின் பதவி விலகலை

# நாடாளுமன்ற செயலாளர் நாயகம் ஏற்கவில்லை என கூறப்படுவது பொய்!

## மாவை சேனாதிராசா தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழரசுக்கட்சி சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிங்ஸ்லி இராசநாயகத்தின் பதவி விலகல் கடிதத்தை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் பிரியானி விஜேசேகர ஏற்றுக்கொள்ளவில்லை எனவெளியான செய்திகளைத் தமிழரசுக்கட்சி நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கைத் தமிழரசுக்கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராசா தகவல் வெளியிடுகையில்-

நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவான கிங்ஸ்லி இராசநாயகத்தின் கையெழுத்திலான தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான பதவி விலகல் கடிதங்கள் என்னால் உறுதிப்படுத்தப்பட்டு நாடாளுமன்ற செயலாளர் நாயகம் பிரியானி விஜேசேகரவிடம் கையளிக்கப்பட்டது.

அரசியலமைப்பின் 66 ஆவது விதிமுறைகளின் படி ஒருவர் தனது கைப்பட எழுதிய கடிதத்தை ஏற்காது விடமுடியாது. ஏற்கனவே சில தவறுகள் இடம்பெற்றதால் உரியவர்களுடன் நாடாளுமன்ற செயலாளர் தொடர்பு கொண்டுள்ளார்.

நேரடியாக சில உறுதிப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் புதிய உறுப்பினர் நியமனத்தில் காலதாமதம் ஏற்பட்டிருப்பதாக மாவை சேனாதிராசா மேலும் தெரிவித்தார்.

## விகாரையில்...

முனைகின்றனர்.

இளைஞர்கள் எமது உயிருக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன. அச்சுறுத்தல் விடுக்கும் நிகழ்வுகள் மிகவும் கவலைக்கிட மாக இருக்கின்றன.

இந்தச் சம்பவங்கள் 1989, 90 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற பயங்கரச் சம்பவங்களை நினைவுகூருகின்றன. மீண்டும் இதேபோன்ற பயங்கரச்சூழல் தலை தூக்கப் போவதாகவே கருதுகிறேன்.

தென்பகுதியிலும், மேற்கிலும் தற்போது நிலவும் அமைதியான சூழ்நிலையைக் குழப்பு கின்ற ஒரு நடவடிக்கையாகவே இதைக் கருதுகிறோம்.

நாம் மிகவும் சிரமமான பயணம் ஒன்றையே மேற்கொண்டு வருகிறோம். இந்தப் பயணத்தின் பாரதூரத்தை நாம் நாடாளுமன்றத்திற்குச் சென்ற முதல்நாளே உணர்ந்து கொள்ளமுடிந்தது.

மனிதர்களாக உள்ள சிலர் மிருகங்களை விடவும் கீழ்த்தரமாக நாடாளுமன்றத்தில் நடந்து கொள்கின்றனர்.

எனினும் இந்த துஷ்ட அழுத்தங்களுக்கு முகம் கொடுத்து மக்கள் எம்மீது வைத்த நம்பிக்கையை நிறைவேற்ற நாம் தயாராக உள்ளோம்.

ஜே.வி.பியின் தலைவர் ஒருவர் தமக்கு இருக்கும் வாக்குகளை அடுத்த வாரத்தில் அதிகரித்துக் கொள்வோம் என்று சூளுரைத்திருக்கின்றார். இதனை அவர்கள் எவ்வாறு செய்யப்போகின்றார்கள்.

வழமையாக வாக்குச் சாவடிகளில் இடம்பெறும் கள்ளவாக்கு நடைமுறையைக் கடைப்பிடிக்கப் போகிறார்களா?

இது மிகவும் பயங்கரமான செயல், இதனைத்தான் இவர்கள் நடைமுறைப்படுத்தப் போகிறார்கள்.

ஜே.வி.பியை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் இந்தப் பயங்கரவாதச்செயலை எமது ஜனநாயக பலத்தைக் கொண்டு கட்டுப்படுத்தவேண்டும்.

முதலில் நாடாளுமன்றத்தில் கட்டுப்படுத்துவோம். அதுபோலவே அரசாங்கத்தின் எதிர்காலம் குறித்தும் எம்மால் தீர்மானிக்க நேரிடும். அரசாங்கத்தைக் கவிழ்ப்பதாக அன்றி பயங்கரவாதத்தை ஒழிப்பதாகவே இந்தச் செயல் அமையும்.

ஜே.வி.பிக்கு இன்னமும் ஜனநாயகம் என்றால் என்னவென்று தெரியாது. இவர்கள் காடுகளில் இருந்து வந்திருக்கிறார்கள்.

முகங்களை மூடிக்கொண்டு ஆயுதங்களைக் கையிலேந்தி, குரல்களை எழுப்பிவந்த இவர்கள் நாடாளுமன்றத்தில் ஏனையோர்மீது சேறுபூசல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் மூலம் ஜே.வி.பி முன்னர் செய்த பயங்கரவாத செயல்களை மறக்கவில்லை என்பது வெளியாகியுள்ளது.

ஜனநாயக வழிமுறைக்கு ஏற்ப ஜே.வி.பி தங்களை மாற்றிக்கொள்ளவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை விகாரையில் கறுப்புக்கொடி பறக்கவிடப்பட்ட சம்பவத்துக்கும் தமக்கும் எந்தவித தொடர்பும் இல்லையென ஜே.வி.பி கூறியுள்ளது.

ஜாதிக ஹெல உறுமய பிக்குகள் நாடாளுமன்றத்துக்கு அனுப்பிய மக்களின் அபிலாஷைகளை மீறிச் செயற்பட்டதால் - மக்களின் எதிர்ப்பிற்கு முகம்கொடுக்கமுடியாது இவ்வாறு இந்தக் குற்றச்சாட்டை சுமத்தி வருவதாக நந்தன குணதிலக தெரிவித்தார்.

## ஆரம்ப கட்ட...

இந்தத் தேர்தலில் வாக்களிப்பதற்காக குருநாகல் மாவட்டத்தில் 10 இலட்சத்து 39 ஆயிரத்து 482 பேர் தகுதி பெற்றிருந்தனர்.

புத்தளம் மாவட்டத்தில் வாக்களிப்பதற்காக 4 இலட்சத்து 50 ஆயிரத்து 57 பேர் தகுதி பெற்றிருந்தனர்.

வடமேல் மாகாணசபைத் தேர்தல் நீதியாகவும் நேர்மையாகவும் நடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

புத்தளம் மாவட்டத்தில் இடம்பெற்ற ஒருசில சம்பவங்களைத் தவிர வடமேல்மாகாணசபைத் தேர்தல் ஒட்டுமொத்தமாக அமைதியாக நடைபெற்றதாக தேர்தல் கண்காணிப்புக்குழுக்கள் தெரிவித்தன.

குருநாகல் மாவட்டத்தில் தேர்தல் அமைதியாக நடைபெற்றதாக தேர்தல் வன்முறைக் கண்காணிப்புக்குழு மத்திய நிலையத்தின் இணைப்பாளர் தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டத்தில் மாத்திரம் 10 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஆனைமடுவத் தேர்தல் தொகுதியிலேயே இவற்றில் அநேக சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். என்றாலும் நேற்று நடந்த தேர்தலில் வாக்காளர்கள் உற்சாகமாக வாக்களிக்கவில்லை என்று சுனந்த தேசப்பிரிய கூறினார்.

## ஹெல உறுமய...

முன்னணி தலைமையிலான அரசு சிறுபான்மையானதாகும். எனவே, நாம் எப்பொழுதும் மற்றைய சிறிய கட்சிகளின் ஆதரவுடனேயே தங்கியிருக்க வேண்டியுள்ளதெனவும், இதனால், பிக்குகளுக்கு எதிரான நடவடிக்கைகளை ஜே.வி.பி நிறுத்த வேண்டுமெனவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மற்றொரு சிரேஷ்ட தலைவர் தெரிவித்தார்.

தற்போது சபாநாயகர் தெரிவு முடிந்துவிட்டது. நாம் இனி நாளாந்தம் எமது நடவடிக்கைகளைத் தொடர வேண்டும்.

எனவே, நாம் இனிவருங்காலங்களில் முடிவு களை எடுக்க பிக்குகளின் ஆதரவு எமக்குத் தேவை யென சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்கள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

நடந்து முடிந்த சபாநாயகர் தேர்வில ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் டபிள்யூ.ஜே.எம். லொக்கு பண்டார வெற்றிபெற்றதற்கு ஹெல உறுமயவின் இரண்டு பிக்குகள் அளித்த வாக்குகளே காரணமெனத் தெரிவித்த ஜே.வி.பியினர் அதன்பின் ஹெல உறுமய பிக்குகளைத் தாக்கி பேசிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## விகாரைக்குள் நுழைந்து...

அவரையும் அந்தக் குழுவினர் மிரட்டியதை அடுத்து நடமாடும் பொலிஸ் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்தபோது மேற்படி குழுவினர் அங்கிருந்து தப்பிவிட்டனர்.

மேற்படி குழுவில் இருந்த ஒருவரைப் பொலிஸார் துரத்திப் பிடித்ததுடன், அவர்கள் வந்த மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றினர். சம்பவம் நடைபெற்ற போது கலாநிதி ஓமல்பே சோபித தேரர் விகாரையில் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றில் இடம்பெற்ற சபாநாயகர் தெரிவின்போது ஜாதிக ஹெல உறுமயவின் இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து வாக்களித்திருந்தனர்.

இதனால் ஏற்பட்ட நிலைமையினைச் சீர்செய்ய இரண்டு ஹெல உறுமய பிக்குகள் ஐ.தே.கவுக்கு ஆதரவாக வாக்களித்தனர். இவர்களில் ஓமல்பே சோபித தேரோவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வடமேல் மாகாணசபைத் தேர்தல் முடிவுகள்

### புத்தளம் மாவட்டம் - நாத்தாண்டியா தேர்தல் பிரிவு

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 22 577 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 13 280 |
| செல்லுபடியான வாக்குகள் | - 36 023 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | - 1 283 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - 37 306 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | - 76 097 |

### குருநாகல் மாவட்டம் - பண்டுவஸ்நுவர பிரிவு

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 20 244 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 13 093 |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - 2 329 |
| செல்லுபடியான வாக்குகள் | - 35 777 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | - 1 483 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - 37 260 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | - 64 979 |

### குருநாகல் மாவட்டம் - மாவத்தகம தேர்தல் பிரிவு

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 22 168 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 15 109 |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - 2 468 |
| ஐக்கிய லலித் முன்னணி | - 73 |
| தேசிய அபிவிருத்தி முன்னணி | - 77 |
| செல்லுபடியான வாக்குகள் | - 39 978 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | - 1 798 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - 41 776 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | - 75 264 |

### புத்தளம் மாவட்டம் - சிலாபம் தேர்தல் பிரிவு

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 29 996 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 20 803 |
| செல்லுபடியான வாக்குகள் | - 51 021 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | - 2 148 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - 53 169 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | - 98 394 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.04.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.